# கூட்டணி வேட்பாளர் தெரிவு முடிவில்லை!

பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 சித்திரை 11 ஜூ அவ்: 3 இதழ்: 71
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 23-4-77

## நியமனக்குழு இன்றும் கூடுகிறது; காங்கேசன்துறை செல்வாவுக்கே!

கொழும்பு, வெள்ளி

தமிழர் விடுதலைக்கூட்டணி அபேட்சகர்கள் முடிவு இன்று இரவுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இன்று காலை தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவர்களில் ஒருவரான திரு. எம். சிவசிதம்பரம் இல்லத்தில் நியமனக்குழு கூடி நண்பகல் வரை ஆராய்ந்தது.

வடக்கில், மற்றும் 8 தொகுதிகள் பற்றியும் கிழக்கு மாகாண தொகுதிகள் பற்றியும் நீண்டநேரம் ஆராய்ந்தும், எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லையெனத் தெரிய வருகிறது.

காங்கேசன்துறை தொகுதி மூதறிஞர் செல்வநாயகத்திற்கே ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், உடுப்பிட்டித் தொகுதி சிறுபான்மைத்தமிழருக்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

நல்லூர் தொகுதியில் போட்டியிடுமாறு திரு. எம். சிவசிதம்பரத்திடம் நியமனக் குழு கேட்டிருப்பதாகவும், இதுபற்றி முடிவுசெய்யப்படவில்லையென்றும் உத்தியோகப் பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா தொகுதியை திரு. ரி. சிவசிதம்பரத்திற்கும், முல்லைத்தீவு தொகுதியை திரு. எக்ஸ். எம். செல்லத்தம்புவுக்கு ஒதுக்குவதுபற்றி ஆலோசிக்கப்பட்டதாகவும் ஆனால் எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லையென்றும் அத்தகவல்கள் மேலும் கூறுகின்றன.

சாவகச்சேரிக்கு திரு. வி. என். நவரத்தினமும், ஊர்காவற்றுறையில் பண்டிதர் கா. பொ. இரத்தினமும், உடுவிலில் திரு. வி. தர்மலிங்கமும், கிளிநொச்சியில் திரு வி. ஆனந்தசங்கரியும், கோப்பாய்தொகுதியில் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளையையும் நியமிக்க ஆலோசிக்கப்பட்டிருப்பதாகவும்,

(8-ம் பக்கம் பார்க்க)

# கூட்டணி-கம்யூனிஸ்ட் மேதினக்கூட்டு முறிவு?

## ராஜினமாவை வாபஸ்பெற அமைப்புக்குழு நிபந்தனை

கொழும்பு, வெள்ளி

**தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழ்த் தொழிற்சங்க சம்மேளனம் ஆகியவைகளுடன் மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பான தொழிற்சங்கங்களையும் சேர்த்து யாழ்ப்பாணத்தில் இன்று [illegible] நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த மே தின ஊர்வலமும் மேதினக் கூட்டமும் இப்போது இரு பகுதியினரும் தனித்தனியாக நடத்தக்கூடிய நிலையை அடைந்துள்ளது.**

கூட்டணி மேதினவிழாவில் கம்யூனிஸ்ட்கட்சியினரைச் சேர்த்துக்கொள்வதில்லை என தமிழ்த் தொழிற்சங்கத்தினர் முடிவுசெய்துவிட்டதாகத் தெரியவருகிறது.

கூட்டணி மேதினப் பொதுக்கூட்டத்துக்குத் தலைமைதாங்குவது யார் என்ற பிரச்னைக்கும் இப்போது முடிவுகாணப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

மேதின ஊர்வலம் ஊர்திபவனி உட்பட மேதினவிழா ஏற்பாடுகளைக் கவனித்துவந்த அமைப்புக் குழுவிலிருந்து ராஜினமாச் செய்த நிர்வாகிகள் தங்களது ராஜினமாவை வாபஸ்பெறுவதற்குச் சில நிபந்தனைகளை விதித்துள்ளனர்.

### வாபஸ்பெற நிபந்தனைகள்

"தமிழ் தொழிற்சங்க கூட்டணி, தமிழர் விடுதலைச் கூட்டணியுடன் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் நடாத்தும் மேதின ஊர்வலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியினர் கலந்து கொள்ளக்கூடாது"

தமிழ்த் தொழிற்சங்க கூட்டணியும், தமிழர் விடுதலைக் கூட்டணியும், மேற்கண்ட நிபந்தனையை ஏற்றுக்கொண்டால் மேதின அமைப்பு குழுவிலிருந்து ராஜினமாச்செய்துள்ள மூவரும் வாபஸ்பெறுவார்கள்.

மேதின கூட்டத்திற்கு சாதாரண தொழிலாளி ஒருவரே தலைமைவகிக்கவேண்டும் என்று மற்றொரு நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது.

மே தின அமைப்புக் குழுவினருக்கும், தமிழ்த்தொழிற்சங்க கூட்டணிகளுமிடையில் சமரசம் ஏற்படுத்த முயற்சி ஏற்படுத்துவோர் இந்த நிபந்தனைகளை முன்வைத்து பேச்சுவார்த்தை நடத்திவருகின்றனர்.

இரு நிபந்தனைகளையும் தமிழ்த்தொழிற்சங்க கூட்டணியிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஏற்றுக்கொண்டால், மூவரும் ராஜினமாவை வாபஸ்பெறுவார்கள் என்றும் கூறப்படுகிறது.

### அமிர் அறிக்கை

"சுயநிர்ணய அடிப்படையிலான தமிழ் ஈழத்தைப் பெறுவதற்கு கம்யூனிஸ்ட்கட்சிஆதரவளிக்க முன்வந்ததையால் மேதினக் கொண்டாட்டத்தில் அக்கட்சியையும் சேர்த்துக் கொள்வதென முன்னர் தீர்மானிக்கப்பட்டது. ஆனல் இப்போது எழுந்துள்ளசூழ்நிலையில் மேதின அமைப்பாளர் மூவரினதும் ராஜினமாவை வாபஸ் பெறுமாறு த வி. கூட்டணி மட்டும் கோருவதுமுறையல்ல.

(8-ம் பக்கம் பார்க்க)

### சிரிப்புச் சொட்டு



'கடவுள் [illegible] காகத் தேர்தலில் குதித்தால்......?'

'அவருடனும் போட்டியிட முப்பது பேர் முன் வருவார்கள்'

-சுந்தர்

# இளைஞர் பேரவை; காங்கிரஸ்

## வாலிபமுன்னணி இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு தமிழ் இளைஞர் பேரவை நடவடிக்கைக்குழுவும், தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணியும் தனித்தனியாகக் கூடுகின்றன.

கூட்டணி காரியாலயத்தில் இளைஞர் பேரவையும்; யாழ் நாவலர் வீதியிலுள்ள காங்கிரஸ் நிர்வாகச் செயலாளர் திரு. தா. சங்கரப்பிள்ளையின் இல்லத்தில் கா. வா. மு. நடைபெறவிருக்கிறது.

இதேசமயம், இன்று பிற்பகல் 2 மணிக்கு நல்லூரில் செட்டித்தெரு ஒழுங்கை 4-ம் இலக்க இல்லத்தில் தமிழ் ஈழ தொண்டர்சபை தேர்தல் ஆலோசனை மாநாடு நடைபெறும். இம்மாநாட்டில் மற்றும் தொகுதிகளுக்கான தொண்டர்சபை அபேட்சகர்கள் தெரிவு நடைபெறும். சபை அமைப்பாளர் திரு. செ. சுந்தரலிங்கம் தலைமையில் இம்மாநாடு நடைபெறும்.

இளைஞர் பேரவைக் கூட்டம் கவிஞர் காசிஆனந்தன் தலைமையிலும், தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணிக் கூட்டம் திரு. குமார் பொன்னம்பலம்

(8-ம் பக்கம் பார்க்க)

### கூட்டணி மேதினம்

# ஊர்வல ஏற்பாடு திடீர் ஸ்தம்பிதம்!

## ராஜினமாவின் எதிரொலி

யாழ்ப்பாணம், சனி

தமிழ்த்தொழிற்சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த மொழிவழித் தொழிற்சங்கங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவுடன் யாழ்ப்பாணத்தில் நடத்தவிருந்த மேதின ஊர்வல ஏற்பாடுகள் யாவும் கடந்த சில தினங்களாக கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

மேதின அமைப்புக்குழுத் தலைவர் திரு. எம். ஆலால சுந்தரம், செயலாளர் திரு. இ. பேரின்பநாயகம், குழு உறுப்பினர் திரு. சிவமகாராசா ஆகியோர் ராஜினமா செய்ததைத் தொடர்ந்து இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கங்களை கூட்டணியின் மேதின ஊர்வலத்தில் சேர்த்துக்கொள்ளக் கூடாதென வவுனியா எம். பி. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு தலைமையில் தமிழ்த் தொழிற்சங்கங்கள் சில முடிவு செய்தன.

இந்நிலையில் கூட்டணி மேதின ஊர்வல ஒழுங்குகளை யார் தொடர்ந்து செய்வது என்பது கேள்விக்குறியாகவுள்ளது. ஊர்வலத்தில் பங்குபற்ற விரும்புவோர்கள், எவ்வித தொடர்பும் ஏற்படுத்திக் கொள்ள முடியாமல் திண்டாடுகின்றனர்.

தமிழரின் கலை கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் அலங்கார ஊர்திகளை, ஊர்வலத்தில் இடம்பெறச் செய்யவிரும்பும் பல வர்த்தகர்கள், அதற்கான அனுமதி கிடைக்காத நிலையில் இருக்கின்றனர்.

இதேசமயம் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவிலுள்ள லங்கா தொழிற்சங்க சம்மேளனம் நாளைகூடி மேதின ஒழுங்கு

[8-ம் பக்கம் பார்க்க]

# நெடுஞ்செழியன் இன்று புதியகட்சி ஆரம்பிக்கிறார்

## அவர் கூறும் விளக்கம்

சென்னை, ஏப 22

லோக்சபா தேர்தலில் தி. மு. க. வுக்குக் கிடைத்த படுதோல்வியையடுத்து தார்மீக ரீதியில் தமது தலைமைப் பதவியிலிருந்து கலைஞர் மு. கருணாநிதி விலகியிருக்க வேண்டும். ஆனல் அதை நிறைவேற்ற தவறிவிட்டார் என்று நாவலர் நெடுஞ்செழியன் இன்று சென்னையில் குற்றஞ்சாட்டினார்.

திராவிடமுன்னேற்றக்கழகப் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து அண்மையில் ராஜினமாச் செய்த நாவலர் இரா. நெடுஞ்செழியன் தாமும் தமது சகாக்களும் இணைந்து ஒரு புதிய கட்சியை அமைக்கப்போவதாக மேலும்அறிவித்துள்ளார்.

இன்று சென்னையில் நிருபர்கள் மத்தியில் பேசிய அவர் தமது புதிய கட்சி பேரறிஞர் சி. என். அண்ணதுரையின் கொள்கைநெறி அடிப்படையில் இயங்குமென்றும் ஏனைய கட்சிகளுடனை தமது கட்சியின் உறவு காலப்போக்கில் நிச்சயிக்கப்படும் என்றும் சொன்னர். தாம் தி. மு. கழகத்தில் இருந்து விலகிய தற்கான காரணம் பற்றி

(8-ம் பக்கம் பார்க்க)

# கேள்வி விளம்பரம்

மானிப்பாய் பட்டின விசேட ஆணையாளரால் கீழ்க்காணும் ரோட்டுவேலைக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1977-05-09ந் திகதி காலை 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் கீழே தரப்பட்டுள்ள கேள்விப் பிணைப் பணமும், பத்திரக்கிரயமும் செலுத்தி 1977-05-06ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். எவ்வித கேள்வியையும் நிராகரிக்க விசேட ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. மேலதிக விபரங்களை விசேட ஆணையாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட ரோட்டுவேலையை 15-6-1977ம் திகதிக்கு முன்னர் பூர்த்தியாக்கி பாரம்கொடுப்பவர் மட்டும் கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலைவிபரம் | பத்திரக் கிரயம் | கேள்விப் பிணை |
|---|---|---|
| 1. அரசடிப்பிள்ளையார்கோவில்வீதி | 10/- | 50/- |

ஒப்பம்:
**கே.கோபாலரத்தினம்,**
விசேட ஆணையாளர்,
மானிப்பாய் பட்டினம்.

5991

## கோப்பாய் கிராம சபை

# கேள்வி விளம்பரம்

கோப்பாய் கிராம சபைத் தலைவரால் கீழ் குறிப்பிட்டுள்ள வேலைகட்கு சீல் வைத்த கேள்விகள் 5-5-77 காலை 10-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்

இச்சபையினுல் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 5000/-க்கு மேல் பதிவுள்ள ஒப்பந்தகாரர்கட்கு மட்டும் 2-5-77 பிற்பகல் 3-00 வரையும் கேள்விப்பத்திரம் வழங்கப்படும்.

| | வேலையின் விபரம் | கேள்விப் பிணை | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 1. | நாயன்மார்கட்டு பாரதிவீதி | 100-00 | 10-00 |
| 2. | அம்மன் கோவிலடி வீதி | 100-00 | 10-00 |
| 3. | ஐ. எம். பி. ரி. எஸ். கோதம்பை வீதி | 50-00 | 10-00 |
| 4. | கோப்பாய் சந்தைக் கட்டிடம் | 100-00 | 10-00 |
| 5. | சரவணபவானந்தா வித்தியாசாலை கிணறு | 40-00 | 10-00 |

மேலதிக விபரங்கள் கிராமசபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**தி. பரமானந்தராசா,**
தலைவர்,
கோப்பாய் கிராம சபை.

5974

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

1. கந்தையா பத்மநாதனும் பெண்
2. மிருளாளினி தேவியும்
நாச்சிமார் கோவில் ரோட்டு, யாழ்ப்பாணம்.

வாதி

இல: ஈடு/15040

எதிராக

இளையதம்பி செல்வராசா கைம்பெண் பராசக்தி
அம்மன் கோவிலடி, கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் M B/15040-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ந் திகதி (29-04-77) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 1672/50ம் 22-8-1975 திகதியிலிருந்து ரூபா 1000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 421/76.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணம் நல்லூர் கோவிற்பற்று கோண்டாவில் இறை "ஒதியனசீமா" நிலபரப்பு 1ம் வீடும் அடுக்களையும் வடக்கெல்லைக் கிணற்றில் பங்கும் இந்தப் பாப்பு ஒன்றுக்கும் எல்லை கிழக்கு இளையதம்பி பெண் கலகதிருநதனம் வடக்கு சரவணமுத்து கைம்பெண் அன்னம்மாவினுதனம், மேற்கு மூன்று முழ அகலங் கொண்ட ஒழுங்கை தெற்கு ஒழுங்கை கிழக்கெல்லைக் காணிக்கும், மிகுதிக் காணியின் மேற்கெல்லைக் காணிக்கும், குறித்த கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் புறநீங்கலாக இதடங்கலும்.

**க. சிவஸ்கந்தா,**
நீதிமன்ற விற்பனை
ஆணையாளரும்
மதிப்பாளரும்.

நாகேந்திர மடம்,
வட்டுக்கோட்டை,
27-03-77.

5980

## தேவை

காஸ்ற் அயன் (Cast Iron) வார்ப்பு வேலையில் அனுபவமுள்ளவர் உடனடியாகத் தேவை. நேரில் வரவும். சேலிஇனாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ், நீர்வேலி.

5969

## தேவை

அக்கராயன்குளம் காந்திக் கிராமம் வாலிபர் விவசாய பயிற்சித் திட்டத்தில் பணியாற்ற தகுதி உள்ள குண்டசாலை விவசாய பயிற்சியாளர் (ஆண்) ஒருவர் தேவை. பொதுச் செயலாளர் அகில இலங்கைக் காந்திசேவா சங்கம், காந்திநிலையம், உருத்திரபுரம். 5970

காசாளர் பதவிக்காக க. பொ. த, வரை படித்தவர்கள் தேவைப்படுகிறார்கள். தகுந்த சம்பளம் வழங்கப்படும். நேரடியாக உடன் தொடர்பு கொள்ளவும். அற்லஸ் இன்டஸ்றீஸ் (யாழ். வீரமாகாளி அம்மன் கோவில் முன்பதாக) யாழ்ப்பாணம். 5972

முல்லைத்தீவில் கடமையாற்ற உடனடியாக பாதுகாப்பு சேவையாளாகள் தேவை. New Maths படிப்பிக்க ஆற்றலிருப்பின் விரும்பத் தக்கது. நேரில் 23-4-77ல் 10 மணிக்கு விண்ணப்பத்துடன் வரவும்: நிர்வாகி, வவனியா வர்த்தகசேவை, குமரன் டூரியஸ்ட் இன், 67' ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 5982

# அறிவித்தல்

## பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்.

தனபாலசிங்கம் சபாரத்தினம்
வழக்காளி.

இல: 9544

எதிராக

1. வையிரவி குழந்தைவேலு,
வல்வெட்டி.

2. செல்லையா கந்தசாமி,
பொலிகண்டி, உடுப்பிட்டி.
எதிராளி.

மேற்படி வழக்கில் பின்னுற் காணும் அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனத்தின் உரிமையைத் தீர்ப்புக்கடன் பெறுநருக்கு ஒப்படைப்பதில் பிசுக்கால், தீர்ப்புக் கடனளியால் நடைசெய்யப்பட்டுள்ளாராகையால்—

ஏதேனும் உரிமை அல்லது அக்கறை இருப்பின் அதன் பயனுக அவ்வாதனம் முழுவதையும் அல்லது ஏதேனும் பாகத்தை உடைமையில் வைத்திருப்பவர்களும், தீர்ப்புக்கடன் பெறுநருக்கு உடமை வழங்கப் படுவதனை ஆட்சேபிப்பவர்களுமான எல்லா ஆட்களும் அவரது கோரிக்கைகளை இவ் வறிவித்தல் வெளியிடப்பட்ட 15 (பதினைந்து) நாட்களுக்குள் இந்நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கும்படி இத்தால் கோரப் படுகின்றார்கள்.

**வே. பொ. மூதலித்தம்பி**
பருத்தித்துறை மாவட்ட
நீதிமன்ற பிசுக்கால்.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி, உடுப்பிட்டி கோவில் பற்று பொலிகண்டி 'நகரக் கட்டானை' நி. பர. 60¼ இதில் தெற்குப் புறமாக நிந்தமாக நி. பர. 14. இது 1968-ம் ஆண்டு ஆனி மாதம் 15-ம் திகதி திரு. K. ஐயாறு நில அளவையாளரால் 886-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப் பட்ட படத்தின்படி 1-ம், 2-ம் துண்டுகள். எல்லை கிழக்கும், மேற்கும், தெற்கும் ஒழுங்கை. வடக்கு வள்ளிநாயகி அம்மாவுக்குடைய ஆதனம். இதடங்கலும்.

5973

# வரி விளம்பரம்

## தேவை

களிசான், சேட் தைப்பதில் அனுபவம் உடைய நேர்மையான ஒருவர் தேவை. இருப்பிட உறுதிப்பத்திரத்துடன் விண்ணப்பிக்கவும். இ. நடேசன், பிரதான வீதி, சங்கானை. 5990

அரசடி வீதி இல. 100, கணேசன் ஸ்ரோஸுக்கு 20 வயதுக்கு உட்பட்ட ஒரு ஆள் தேவை. விபரங்களுக்கு காலை 8—9 மணிவரை தொடர்பு கொள்ளவும். 5987

கண்டியில் உள்ள சைவ ஹோட்டல் ஒன்றிற்கு மனேஜராகவும் காசாளராகவும் ஒருவர் தேவை. 30வயதிற்கு மேற்பட்டவரும் அனுபவமும் உள்ளவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது, 24-4-77 க்கு முன் நேரில் வரவும். செ. செல்வகுமார், 68/5, இராசாவின் தோட்டம்வீதி, யாழ்நகர். 5988

## பயிற்சி

வெல்டிங், வயறிங், றேடியோ மேல்நாட்டு முறையில் காலை பிற்பகல், மாலைநேரப் பயிற்சிகள் NIET, 123, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 5931

## விலை குறைப்பு

புளொக் தயாரிப்பு

பழைய விலை

1 சதுர அங்குலம்— ரூபா 2/-

புதிய விலை

1 சதுர அங்குலம் ரூபா 1/80 சதம்.

ஞானம்ஸ் ஸ்ரூடியோ, யாழ்ப்பாணம். 5994

## சிரமதானம்

கல்வியங்காடு, சனி நல்லூர் மூத்த விநாயகர் சைவ இளைஞர் மன்றத்தினர் சிரமதான இயக்கமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

இவ்வியக்கத்தின் முதற்பணி நல்லூர் மூத்த விநாயகர் ஆலயத்திலேயே நேற்று ஆரம்பமாகியது. இவ்வாலயத்தை புனருத்தாரணம் செய்யவும் தேவையான புதிய கட்டிடங்கள் அமைப்பதிலும் கோவிலுக்கு வெள்ளை அடிப்பதிலும் இவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். சைவ இளைஞர் மன்றத் தலைவர் இ. யோகீஸ்வரசர்மா தலைமையில் நடைபெறும் இச்சிரமதானப் பணியினை இயக்க ஆலோசகர் திரு. கா. சி. விஸ்வநாதன் ஆரம்பித்துவைத்தார். (இ)

## பதவி வெற்றிடம்

### கடற் தொழிலாளர் கூட்டுறவுச்சங்கம், பருத்தித்துறை.

1. பொதுமுகாமையாளர் தரம் III
2. கணக்கு லிகிதர் தரம் II

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் என்னல் கோரப்படுகின்றன.

### பொதுமுகாமையாளருக்கான தகைமைகள்

(அ) கூட்டுறவுப் பயிற்சி பெற்றுள்ள பட்டதாரி
அல்லது

(ஆ) மூன்று வருட கால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர்தர தராதரப்பத்திரமுடையவர் அல்லது

(இ) ஐந்து வருடகால அனுபவமுடைய முன்னை நாள் கூட்டுறவுப் பரிசோதகர் அல்லது

(ஈ) ரூபா இருபது லட்சத்தினை வருடாந்த மொத்த விற்பனையாகக் கொண்ட வியாபாரத்தாபனம் ஒன்றில் மேல் முகாமைப் பதவி ஒன்றில் மூன்று வருட கால அனுபவமுடையவர்.

வயது: 25 — .0 வருடங்கள்

சம்பள விகிதம்: 340 — 590
15×10, 20×5

பிணைப்பணம்: இயக்குனர் சபையின் தீர்மானப்படி செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.

### கணக்கு லிகிதருக்கான தகைமைகள்

(அ) க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் ஆறு பாடங்களுடன் கூடிய சித்தி. அவற்றுள் வர்த்தக எண் கணிதம் அல்லது கணக்கியல் ஒரு பாடமாக இருக்கவேண்டும்.
அல்லது

(ஆ) கணக்கியலில் திறமைச்சித்தியுடன் கூடிய கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (சாதாரணம்) கணக்கியலில் அல்லது எண் கணிதத்தில் திறமைச்சித்தியுள்ள க. பொ. த. (சாதாரணம்) விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயது: 20—35 வருடங்கள்

சம்பள விகிதம்: 180 — 304
6×10, 8×8

விண்ணப்பங்கள் 77-04-30 நண்பகல் 12 மணிக்குப் பிந்தாமல் தலைவர், பருத்தித்துறை கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், தும்பளை வீதி, பருத்தித்துறை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரிகள் ஒரு நேர்முகப் பரீட்சைக்கு தோற்றவேண்டி ஏற்படும். நேர்முகப் பரீட்சையின் போது கல்விச் சான்றிதழ், அண்மையில் பெறப்பட்ட ஒரு நற்சான்று பத்திரங்கள் ஆகியவற்றுடன் தோன்றத் தயாராக இருக்கவேண்டும்.

பிணைப்பணம்: இயக்குனர்சபையின் தீர்மானப் படி செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

தலைவர்,
கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்,
பருத்தித்துறை.

5981

# 3 பாக். நகரங்களில் இராணுவச்சட்டம் அமுல்!

## கலவரங்களில் இதுவரை 200 பேர் பலி

கராச்சி, ஏப்ரல் 22

**பாகிஸ்தானில் கடந்த 6 வாரங்களாக நடைபெற்றுவரும் எதிர்க்கட்சியினரின் கலவரங்களை அடுத்து மூன்று முக்கிய நகரங்களில் இராணுவச் சட்டம்பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

**பாக். பிரதமர் ஜனப் சுல்பிகார் அலிபூட்டோவை ராஜினமாச்செய்யுமாறு கோரி பொது வேலைநிறுத்தம்ஒன்றை மேற்கொள்ளுமாறு தொழிற் சங்கத் தலைவர்கள் அழைப்பு விடுவதற்கு முன்னர் இந்த இராணுவச்சட்டம் அமுல்செய்யப்பட்டது.**

இதுவரை பாகிஸ்தானில் நடைபெற்ற கலவரங்களில் 200க்கும்அதிகமானோர் பலியானர்கள் என்றும் ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**சுட்டுக்கொல்ல உத்தரவு**

ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ள மூன்று முக்கிய நகரங்களான கராச்சி, லாகூர், ஹைதரபாத் ஆகிய இடங்களில் இராணுவச் சட்டத்தைமீறி நடமாடுவோரை கண்ட இடத்தில் சுட்டுக் கொல்லுமாறு இராணுவத்தினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பாக். கலவரங்களுக்கு முக்கிய காரணகர்த்தாஎனக்கூறப்படும் எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான முன்னாள் இராணுவத் தலைவர் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். (இ)

## பூட்டோவை வெளியேற்றி தேர்தலை நடத்துக

### மாஜி இராணுவத்தளபதி கோரிக்கை

கராச்சி, ஏப். 22

'பாகிஸ்தான் பிரதமர்ஜனப் சுல்பிகார் அலிபூட்டோவை பதவியிலிருந்து இறக்கிவிட்டு மூன்றுமாதங்களுக்குள் அங்கு தேர்தலை நடத்துக,.

இவ்வாறு பாகிஸ்தானின் முன்னாள் இராணுவத் தளபதி தற்போதைய முப்படைத்தலைவர்களையும் கேட்டுள்ளார்.

இவரின் கூற்றுக்கு பாகிஸ்தானின் சில வெளிநாட்டுத் தூதுவர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனராம். (இ)

# ஷயர் போரில்

## கியூபா தலையிட வில்லையாம்

### ரஷ்யாவும் மறுப்பு

ஹவாஞ, ஏப். 22

ஷயரில் நடைபெறும் சண்டையில் கியூபா தலையிடவில்லை என்று கியூபா அரசாங்கம் அறிவித்துள்ளது.

அண்மையில் தெற்கு ஷயருக்குள் நடைபெற்ற போரில் கியூபாவில் பயிற்றுவிக்கப்பட்ட துருப்புக்கள் போரிட்டன என்ற ஷயரின் கூற்றுக்கும் கியூபா மறுப்புத் தெரிவித்துள்ளது.

ஷயர் சண்டைக்கு மொராக்கோவே காரணம் என்றும் கியூபா தெரிவித்துள்ளது.

**சோவியத்யூனியன் மறுப்பு**

ஷயர் சண்டையில் தமது நாடும் தலையிடவில்லை என்று சோவியத்யூனியனும் மறுப்புத் தெரிவித்துள்ளது. (இ)

## பருவாவுக்கு நீதிமன்ற நோட்டீஸ்

காஷ்மீர், ஏப். 22

நீதித்துறையை இழிவுபடுத்தும் வகையில் நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ள இந்திய காங்கிரஸின் முன்னாள் தலைவர் திரு. பருவாவுக்கு நீதிமன்ற நோட்டீஷ் அனுப்பப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 31ம் திகதி ஜம்முகாஷ்மீர் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அவருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (இ)

## ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், சனி

லங்கா தொழிற் சங்க சம்மேளன யாழ்ப்பாணக்கிளையின நிர்வாகசபைக்கூட்டம், சங்கக் கார்யாலயத்தில் நாளை மாலை 5 மணிக்கு நடைபெறவிருக்கிறது

இக்கூட்டத்தின் மேதின ஒழுங்குகள்பற்றி முடிவு செய்யப்படவிருக்கிறது. (க)

## ஜெயப்பிரகாஷருக்கு திடீர் காய்ச்சல்

### பார்வையாளர்அனுமதிக்கப்படவில்லை

பம்பாய், ஏப். 22

பம்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணனின் உடல் நிலை குன்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அவருக்கு திடீரென காய்ச்சல் ஏற்பட்டுள்ளதென டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

பூரண ஓய்வு எடுக்குமாறும் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

மறு அறிவித்தல்வரை திரு. ஜெயப்பிரகாஷரைப் பார்வையிட பார்வையாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

# தமிழ் நாடு காங்கிரஸ் தலைமையிலும் சர்ச்சை

## மூப்பனரை வெளியேற்ற கையெழுத்து வேட்டை: சுப்பிரமணியம் ஆலோசனை

சென்னை, ஏப். 22

தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைப் பீடத்திலும் தலைவர் பதவிகுறித்து பெரும் சர்ச்சை எழுந்துள்ளது.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருக்கும் திரு. கருப்பையா மூப்பனரை பதவியிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று கட்சியின் மேலிடத்தைக் கோரும் பொருட்டு கட்சிக்குள் பலர் கையெழுத்து வேட்டையில் இறங்கியுள்ளனர்.

இதே வேளையில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவியிலிருந்து தாம் ராஜினமாச் செய்யவிரும்புவதாக திரு. கருப்பையா மூப்பனர் அறிவித்துள்ளார்.

இதே சமயம், திரு. மூப்பனரைப் பதவியிலிருந்து விலக வேண்டாம் என்று கட்சிக்குள் இன்னுமொரு சாரார் கோரி வருகின்றனராம்.

**சுப்பிரமணியம் ஆலோசனை**

இவ்விடயம் குறித்து முன்னாள் நிதி அமைச்சரும் தற்போது பழனி தொகுதி லோக சபை உறுப்பினராகவும் இருந்து வரும் திரு.ஸி' சுப்பிரமணியம் நேற்று சென்னைக்கு வந்து காங்கிரஸ் கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினர்.

எதிர்வரும் ஜூன் மாதத்தில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படும் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி முழு மூச்சாக ஈடுபடவேண்டி இருப்பதால் தமிழ்நாடு காங்கிரஸ்தலைமைப் பீடத்திலிருந்து திரு. மூப்பனரை இறக்க வேண்டாம் என்று கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் திரு. சுப்பிரமணியத்திடம் தெரிவித்தனர். (இ)

# 9 காங்கிரஸ் மாநில அரசுகள் கலைப்பு; ஞாயிறு இறுதிமுடிவு

புதுடில்லி, ஏப். 22

கடந்த லோகசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வியடைந்தத் மாநிலங்களில் சட்டசபைகளைகலைத்து விட்டு புதி 9 தேர்தல் நடத்துவது சம்பந்தமான விஷயம் குறித்த அரசின் இறுதித்திர்மானம் வருகிற ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் கூறியிருக்கிறார். வருகிற சனிக்கிழமைக்கு முன்னதாக காங்கிரஸ் முதலமைச்சர்கள்தங்கள் முடிவை தெரிவிப்பார்கள் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும்அவர்கூறினர்

சட்டசபைகள் கலைக்கப்பட்டாலும் குறுகிய கால இடைவெளிக்குள் தேர்தல் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் சரண்சிங் மேலும் கூறியதாவது:

தேர்தலில் படுதோல்வியடைந்த ஒரு கட்சியினர் அரசாங்கத்தில் நீடிப்பது அரசியல் சாஸனத்துக்கு முரணனது என்று சொல்வதில் தவறில்லை. படுதோல்வி அயடைந்தவர்கள் ஆட்சியில் இருக்க முடியாது என்று அரசியல் சாஸனத்தில் எழுதப்படவில்லையானலும் ஆளும் கட்சியிலிருந்தவர்கள் தோல்வியடைந்த பட்சத்தில் அரசிலிருந்து விலகவேண்டும் என்ற மரபை நாம் தான் நடைமுறைக்கு கொண்டுவரவேண்டியுள்ளது. அதாவது முன்னெப்பொழுதும் இல்லாதவாறு ஆளும்கட்சியினருக்கு இவ்வளவு தூரம் படுதோல்வி ஏற்பட்டமை இதுதான் முதற்தடவை. எனவே இதனை மரபாகக்கொண்டு 9 மாநிலங்களிலும் ஆட்சியில்உள்ள காங்கிரசார் பதவியிலிருந்து விலகிக்கொள்வது விரும்பத்தக்கது'' (ஆ)

## உள்துறை மந்திரியின் கருத்து:அறநெறிக்கு இழுக்கு

### சுவரண்சிங் கூறுகிறார்

புதுடில்லி, ஏப். 22

காங்கிரஸ் மாநிலங்களில் சட்ட சபைகளைக் கலைக்க வேண்டும் என்ற உள்துறை அமைச்சரின் யோசனை அரசியல் நோக்குடையது என்றும் இச்செயல் அரசியல் சாஸனத்துக்கும்அறநெறிக்கும்இழுக்கை ஏற்படுத்தும் என்றும் காங்கிரஸ் தலைவர் திரு. சுவரண்சிங் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசினதும் மாநில அரசுகளினதும் முன்னுள்ள பிரச்னைகள்பல வேறுபட்டவை மாநிலப் பிரச்னைகளையும் தேசியப் பிரச்னைகளையும் ஒன்றிணைத்து மத்தியில் அரசு மாறிய போது மாநிலஅரசுகளும் மாற வேண்டுமென்ற கோரிக்கை பொருத்தமற்றது என்றும் அவர் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

இந்திய வாக்காளர்களில் 35 வீததினர் காங்கிரஸ்கட்சியினரை ஆதரித்துள்ளனர். இதேவேளையில் காங்கிரஸ் கட்சியை மக்கள் அடியோடு புறக்கணித்துவிட்டனர் என்பது தவறு.

மக்களின் தீர்ப்புப்படியே தாம் நடப்பதாகக் கூறிவரும் ஜனதா கட்சியினர், தென்மாநிலமக்களின் தீர்ப்புக்கு என்ன பதில் கூறுகிறார்கள் என்றும் திரு. சுவரண்சிங் கூறினர்.

**காங்கிரஸின் மதிப்பு உயரும்**

குறிப்பிட்ட 9 மாநிலங்களிலும் சட்டசபைகளைக் கலைத்துவிட்டு மீண்டும் தேர்தலை நடத்துவது ஜனநாயகத்துக்கு உகந்தது என்றும் புதிய தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றால் காங்கிரஸின் மதிப்பு மேலும் உயரும் என்றும் முன்னாள் சபாநாயகரும் முதல்மந்திரியுமான காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளனர். (இ)

## விலைக்கட்டுப்பாட்டை மீறிய 4 வர்த்தகர்கள் அகப்பட்டனர்

யாழ்ப்பாணம், சனி

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறியதாகக் கூறப்படும் நான்கு வர்த்தகர்கள் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளிடம் சிக்கிக்கொண்டனர்.

இயக்கச்சியைச் சேர்ந்த ஒரு வர்த்தகர் சுவேந்திரா பௌடர் டின் ஒன்றின் கட்டுப்பாட்டு விலை 3 ரூபா 75 சதமாக இருக்க அதனை 4 ரூபாவுக்கு விற்றூராம். இதேயிடத்தைச் சேர்ந்த மற்றொரு வர்த்தகர் அப்பியாசக் கொப்பி (20 தாள்கள்) ஒன்றின் கட்டுப்பாட்டு விலை 30 சதமாக இருக்க அதனை 35 சதமாக விற்றூராம்.

கிளிநொச்சியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தீப்பெட்டி நான்கை 60 சதமாக விற்றூராம். ஒரு தீப்பெட்டியின் கட்டுப்பாட்டு விலை 10 சதமாகும்.

ஒரு சாம்பியன் பிளக் 9 ரூபா 10 சதமாக இருக்க அதனை 18 ரூபாவுக்கு விலை கூட்டி விற்றூராம். இதேயிடத்தைச் சேர்ந்த மற்றொரு வர்த்தகர்.

யாழ். விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளான சிவபாதசுந்தரம், சுப்பிரமணியம், நவரத்தினம், தர்மகுலசிங்கம் முதலானோர் மேற்படி திடீர் சோதனைகளை நடத்தினர். (உ-இ)

### மணிவாக்கு

கண்களை இழந்தவனல்ல குருடன். எவன் தன்னிடமுள்ள குறைகளை மறைக்கிருனே, அவனேகுருடன்.

—காந்திமகான்

ஈழநாடு
THE EELANADU

## தேர்தல் பிரச்சாரம்

தேர்தல் வருமா வராதா என்ற கேள்வி முடிந்து எப்போது தேர்தல் என்ற கேள்வியே இன்று எழுந்துள்ளது.

நாட்டிலுள்ள சகல அரசியல் கட்சிகளும் தேர்தலுக்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன.

புதிய கட்சிகளும் தலையெடுத்துள்ளன.

இந்தச் சிறிய நாட்டில் இத்தனை அரசியல்கட்சிகளா என்று வியக்கும் அளவுக்கு அரசியல் கட்சிகளின் தொகை அதிகரித்துள்ளன.

கட்சிகள் தவிர தேர்தலில் போட்டியிடுவதற்குச் சுயேச்சையாளர்களும் பலர் ஏற்பாடுகள் செய்துவருகின்றனர்.

கட்சிகளுக்கிடையில் தேர்தல் உடன்பாட்டுக்கான பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றுவருகின்றன.

பொதுத் திட்டத்தின்கீழ் முன்னணி அமைப்பதற்கான முயற்சிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

ஒரு கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கு அனுமதி கிடைக்காவிட்டால் வேறு எந்தக் கட்சியில் சேர்ந்து போட்டியிடலாமென்று சிந்திப்போரும் சுயேச்சையாகக் கேட்கலாமென்று சிந்திப்போரும் இல்லாமலில்லை.

இது ஆட்சிமன்ற ஜனநாயக முறையுள்ள நாடுகளில் சாதாரண விஷயம்.

தேர்தல் பிரசாரம் இப்பொழுதே ஆரம்பித்துவிட்டது. துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் காட்சியளிக்கத் தொடங்கிவிட்டன.

தேர்தலுக்குத் தேதிகுறிக்கப்பட்டுவிட்டதும் தேர்தல் பிரசாரம் சூடுபிடிக்கத் தொடங்கிவிடுமென்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

தேர்தலில் போட்டியிடும் கட்சிகளும் சரி, சுயேச்சையாளர்களும் சரி தாங்கள் வெற்றியீட்டுவது நிச்சயம் என்ற நம்பிக்கையுடன்தான் போட்டிக்கு நிற்பார்கள்.

யாரும் தோல்வியை எதிர்பார்த்து தேர்தலில் நிற்பதில்லை.

வெற்றியீட்டுவதற்கு என்னென்னவழிகளைக் கையாள முடியுமோ, தந்திரங்களை உபயோகிக்க முடியுமோ அத்தனையையும் அவர்கள் கையாள்வார்கள், கையாளத்தான்வேண்டும்.

கட்சி அரசியல் காரணமாக சமூகத்தில், குடும்பத்தில் வேறுபாடுகளும் பிரிவினைகளும் ஏற்படுவது கடந்தகால அனுபவம்.

தேர்தல் வந்தால் வீண் செலவுகளுக்கும் வீண் பிரச்னைகளுக்கும் கூடக் குறைவில்லை.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் 1960ம் ஆண்டிலிருந்து ஒரேநாளில் நாடு முழுவதிலும் தேர்தல் நடைபெறுவதும், தேர்தல் பிரசாரங்களில் கட்டுப்பாடு கைக்கொள்ளப்படுவதும் பெரும் ஆறுதல்.

ஆனாலும் தேர்தல் நேர்மையாகவும் அமைதியாகவும் நடைபெறுவதற்கு அரசியல் கட்சிகளும் அரசியல் தலைவர்களும் வழிகாட்ட வேண்டியது அவசியம்.

மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய முறையில் பிரசாரம் செய்வதையும், வாக்குரிமைபெறும் வயது வராத மாணவர்களைக் கட்சிப் பிரசாரத்துக்குப் பயன்படுத்துவதையும், இன,மத, மொழித் துவேஷத்தைத் தூண்டக்கூடிய பிரசாரத்தையும் தவிர்த்துக்கொள்வதற்கு சகல அரசியல் கட்சித் தலைவர்களும் கலந்தாலோசித்து நெறிமுறைக் கோட்பாடுஒன்று வகுத்துக்கொண்டால் தேர்தல் ஒரு பிரச்னை என்ற கருத்தையே மாற்றிக் கொள்ளலாம்.

## பொன்விழாக் காணும் பேராதனை தமிழ்ச்சங்கம்

— சி. நவரத்தினம் —
(தலைவர் — தமிழ்ச்சங்கம்)

பேராதனை வளாகத் தமிழ்ச்சங்கம் 50வருடங்களைப் பூர்த்தி செய்து பூரணத்துவம் நிறைந்த தன்பொன் விழாவை இன்று கொண்டாடுகின்றது.

ஒரு மொழியின் உயிரும் இயக்கமும் அந்த மொழிக்குரிய கலை, இலக்கியம், கலாச்சாரம், பண்பாடு என்பவற்ருல் நிர்மானிக்கப்படுகின்றது. தனி மொழியைச்சுமந்து கொண்டு இயங்கும் ஓர் இயக்கம் பல்கலைக்கழக புத்திஜீவிகளின் கலை, இலக்கிய, சமூக வாழ்வோடு இணைந்துசெயற்படும்போது தானும் வளர்ந்து தனக்குள் அடங்கிய சமுதாயத்தையும் வளர்த்து விடுகின்றது. இதனையே பேராதனைத் தமிழ்ச் சங்கம் கடந்த 50 வருடமாக தன் தொண்டாகவும் பணியாகவும் கொண்டு இயங்கி வந்திருக்கின்றது.

பேராதனை வளாகத் தமிழ்ச் சங்கத்தின் வரலாறு தொன்மித்ததாகும்.

பல்கலைக்கழகக் கல்லூரியாக இயங்கிய காலத்தில் 50 வருடங்களுக்குமுன் அப்போதைய கணிதப் பேராசிரியராக இருந்த வி. சுந்தரலிங்கத்தினுல் 'தமிழ்ச் சங்கம்' ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின்பு பல்கலைக்கழகமாகி, கொழும்பு பேராதனை வளாகங்களாகப் பிரிந்தபோது தமிழ்ச்சங்கம் பேராதனையில் இயங்கியது. கொழும்பு வளாக மாணவர்கள் தமக்கென ஒருசங்கமாக 'தமிழ் மன்றம்' என ஆரம்பித்தார்கள். இதன் பின்பு உண்டாக்கப்பட்ட பல்கலைக்கழக வளாகங்களில் எல்லாம் தமிழ் மாணவர்கள் தமக்கென சங்கங்களை உருவாக்கி இயங்கி வருகின்ருர்கள்.

தாய்ச்சங்கமாக விளங்கும் பேராதனை வளாகத் தமிழ்ச் சங்கத்தின் பணிகளும்தொண்டுகளும், உருவாக்கங்களும் காத்திரம் வாய்ந்ததாக இருந்துவருகிறது.

பல்கலைக்கழகத்துக்கு வரும் மாணவர்களின் கலை, இலக்கிய கலாச்சாரஉணர்வை வெளிக்கொண்டுவரும் ஒரு விளை நிலமாகவும் உறவை திராவகப்படுத்தும் ஊக்கியாகவும் இருந்திருக்கின்றது. இச்சங்கம் ஈழத்தின் கலை, இலக்கிய சமூக உலகுக்கு அளித்த சேவையும் தொண்டும் அளப்பரிய தென்றே சொல்லவேண்டும். இன்றைய சமூக முகப்பில் பெரும், பெரும் அரசியல் வாதிகளாக இருக்கின்றது தலைவர்களை உருவாக்கிய பெருமை இச்சங்கத்துக்குரியது. இவர்கள் ஏதோ ஒருவகையில் சங்கத்தோடு தொடர்பு பட்டவர்களாகவும் அங்கம் வகித்தவர்களாகவும் இருந்திருக்கின்ருர்கள்.

ஒரு மொழிக்கு அழகை அம் மொழிக்குரிய கலை இலக்கியங்களே தருகின்றது. இவ்வகையில் இத் தமிழ்ச் சங்கம் கலை இலக்கிய பரப்புக்கு புகழ் பெற்றஇலக்கிய கர்த்தாக்களையும் கலைஞர்களையும் தந்துள்ளது. உதாரணமாக இன்று புகழ் பெற்ற எழுத்தாளர்களாகத் திகழும் செ. யோகநாதன் செங்கை ஆழியான் செ. கதிர்காமநாதன் செம்பியன் செல்வன் மு. பொன்னம்பலம், மு.த. துருவன் போன்ற நாவல், சிறுகதை எழுத்தாளர்கள் கலைவாழ்வில் சி. மௌனகுரு, தாஸீஸியஸ் போன்றவர்களைப் பெற்றெடுத்த பெருமை பேராதனைத் தமிழ்ச் சங்கத்துக்குரியது.

சமூக வாழ்வுக்குரிய பல நிர்வாக சேவையாளர்களையும் நிர்வாகிகளையும் உயர்கல்விப் பீடங்களைச் சேர்ந்த அநேகரையும் பேராதனை வளாகத் தமிழ்ச் சங்கம் உருவாக்கியிருக்கின்றது. ஏதோ ஒருவகையில் இவர்கள் தொடர்பு பட்டவர்களாக இருந்திருக்கின்ருர்கள். உதாரணமாக யாழ். வளாகத் தலைவர் கை. கைலாசபதி, அ. சண்முகதாஸ், கொழும்பு வித்தியாலங்கார வித்தியோதய வளாகங்களைச் சேர்ந்த ஆ. சதாசிவம் பூலோக சிங்கம், ஐ. தனஞ்செயராஜசிங்கம் கா. சிவத்தம்பி போன்ற உயர்கல்விபீட பேராசிரியர்கள் பேராதனைத் தமிழ்ச் சங்கத்தில தாம் மாணவர்களாக இருந்த காலத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்களாகவும் சங்கத்தின் மடியில் உறங்கிவிழித்து வளர்ந்தவர்களாகவும் சொல்லலாம்.

இதுபோன்ற எத்தனையோ அறிஞர்களையும் கலை இலக்கிய வாதிகளையும் நிர்வாகிகளையும் இன்னும் உருவாக்கவிருக்கின்றது. இன்று கொண்டாடும் பொன்விழா ஒரு பெருவிழா மீண்டும் வராத இப்பொன்விழாவை எங்கள் குழு கொண்டாடுவதில் நாம் பெருமையும் பூரிப்பும் பெறுகிருேம்.

வாழ்க தமிழ்!

### நாட்டிய நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், சனி

ஊரெழு ஸ்ரீவீரகத்தி விநாயகர் சித்திரத்தேர் திருப்பணி நிதிக்காக இம்மாதம் 30ம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் செல்வி ரேணுகா அம்பலவாணரினதும் அவரது மாணவிகளினதும் பரத நாட்டிய நிகழ்ச்சி நடைபெறும்.



செல்வி ரேணுகா

எஸ். ராம்தாஸ் குழுவினரின் முழுநீளநகைச்சுவை நாடகமும் இந்நிகழச்சியின்போது நடைபெறும். (இ)

### கூட்டணிக் கருத்தரங்கு

கல்வியங்காடு, சனி

தமிழர் விடுதலைக்கூட்டணிக் கருத்தரங்கொன்று நாளை மானிப்பாய் சாத்தாவத்தை வைரவர் ஆலய முன்றலில் இடம் பெறும்.

இக்கருத்தரங்கிற்கு உடுவில் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் தலைமை தாங்குகின்ருர். தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர்களில் ஒருவரான திரு. அ. அமிர்தலிங்கம், திரு. மு. ஆலாலசுந்தரம், திரு. வண்ணை ஆனந்தன் பொன்மதிமுகாரசா, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோர் இக்கருத்தரங்கில் உரைநிகழ்த்துவர். (வி)

### மேதினக் கூட்டம்

ஹட்டன், புதன்

புதிய செங்கொடி சங்கமும், இலங்கை வாலிபர் சங்க சம்மேளனத்தின் ஹட்டன் கிளையும், இணைந்து இம்முறை மேதினக் கூட்டத்தை ஹட்டன் நகரசபை பண்டபத்தில் நடாத்தவுள்ளன.

மேதினத்தையொட்டி தோட்டத் தொழிலாளர்களின் மாதச்சம்பளக் கோரிக்கை, தோட்டப்பாடசாலைகள் தேசியமயம், தொழிலாளர் குடியிருப்பு, சுகாதார வசதி போன்றவற்றை வழங்குமாறு அரசை வலியுறுத்தி ஹட்டனில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்த பொலிசாரிடம் அனுமதிகோரியிருந்த போதிலும், பொலிசாரினல் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. (க)

### ச. ச. நிலையத்தின் சேவை

யாழ்ப்பாணம், சனி

சமுதாய வளர்ச்சியில் மாத்திரமல்ல, ஒரு நாட்டின் வளர்ச்சியிலும் சனசமூக நிலையங்கள் குறிப்பிடக் கூடிய வகையில் சேவையாற்ற வேண்டும். அத்த வகையில் சென். ஜேக் சனசமூக நிலையத்தின் சேவை பாராட்டப் படவேண்டிய ஒன்ருகும். ஒரு சனசமூக நிலையம் துணிந்து இப்படியான ஒரு பாலர் பாடசாலையை சகல வசதிகளுடன் கட்டிமுடித்திருப்பது போற்றப்பட வேண்டியதாகும்''

இவ்வாறு சென் ஜேக் சனசமூக நிலைய புதிய பாலர் பாடசாலை கட்டிடத்தை திறந்து வைத்து யாழ். அரசாங்க அதிபர் திரு. லால் விஜயபாலா பேசும்போது கூறினர். விழாவிற்கு, யாழ லயன்ஸ் கிளப் தலைவர் திரு. சி. மகேசன் தலைமை வகித்தார். விழாவில், யாழ்-தேசிய பேரவை உறுப்பினர் திரு.சி. எக்ஸ். மாட்டீன், 'அரஸ்கோ' இன்டஸ்றீஸ் உரிமையாளர் திரு.இ. அரசரெட்ணம் பிரதம விருந்தினராக் கலந்து கொண்டனர்

'அரஸ்கோ' உரிமையாளரிடம் நிலையமாதர்கழகத்தினர் சார்பில் வித்த கோரிக்கையை நிறைவேற்றித்தருவதாக வாக்குறுதி அளித்தார்.

நிலையசார்பில் மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா,

### சங்காபிஷேகம்

கல்வியங்காடு, வெள்ளி

அராலி மேற்கு மேளாம் சாக்குண்ணிய மூர்த்திஞானியார் தேவஸ்தான நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும், இலட்சார்ச்சனைப் பூர்த்தி விழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

இன்று (சனிக்கிழமை)கிரியா நிகழ்ச்சிகள் இடம்பெறும். இவற்றில் பகல் 12 மணிக்கு சூரிய வெப்பத்தில் இருந்து ஹோமாக்கினி தயாரிக்கும் நிகழ்ச்சியும் 2 மணிக்கு விக்னேஸ்வர பூஜையும் இரவு 9 மணிக்கு யாக பூஜையும் இடம் பெறும்.

ஞாயிறன்று பகல் 12மணிக்கு நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகத்துடனும் விசேஷ பூஜையுடனும் ஆரம்பமாகும் பூஜை,அன்றிரவு 7 மணிக்கு விசேஷ சோட சோபசார பூசையும் இலட்சார்ச்சனைப் பூர்த்தியும் இடம் பெறும். அதைத்தொடர்ந்து சுவாமி வீதி உலாவும் இடம்பெறும். அன்றைய விசேஷ நிகழ்ச்சியாக நாதஸ்வரக் கச்சேரியும் திரு. கடேசன் சிவசண்முகமூர்த்தியின் 'அறிவும் ஆற்றலும்' என்ற சொற்பொழிவும் இடம்பெறும். (க-இ)

'புண்ணியபூபதி' பட்டமளித்து பாராட்டுப்பத்திரமும் வழங்கப்பட்டது. நிலையச் செயலாளர் திரு. வி. எம். ஜெறுட், அனைவருக்கும் நன்றி தெரிவித்துப் பேசினர். (க)

### நல்லையில் திருநெறிய தெய்வீகமகாநாடு

கல்வியங்காடு, சனி

நல்லைஞானசம்பந்தர் ஆதினத்தில் நடைபெறும் திருநெறிய தெய்வீக மகாநாட்டுத் தொடரில், இன்றுகாலை இந்து நாகரிகத்துறை பீடாதிபதி கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் தலைமையில் தெய்வீகப்பேரவைக்கருத்தரங்கு நிகழும்.

பண்ணிசைக்கலாநிதி வே. த. வி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் திருமுறைக் கருத்தரங்கில், ஆதீன பண்ணிசை ஆசிரியர் திரு. செ. இ. திருஞானசம்பந்தன், சந்நிதபூஷணங்கள் திருவாளர்கள் சி. விஞசித்தம்பி, வே. கனகரத்தினம், வி. பாமசாமி, திருமுறை இசைவாணி திருமதி ஜானகி மகேஸ்வரஐயர், பண்ணிசைமாமணி திருமதி பூமணி ராஜரத்தினம், ஆகியோர்பங்கு பற்றுவார்கள்.

மாலை நடைபெறும் புராண விழாவில் பிரம்மஸ்ரீ வ. குக சர்மா, திரு. வே. சபாபதிப் பிள்ளை, பண்டிதர் மு. கந்தையா, திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம், பிரம்மஸ்ரீ சி. வை. நித்தியானந்த சர்மா ஆகியோர் உரையாற்றுவர். (ஈ)

### வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

கரவெட்டி விக்னேஸ்வரா பெற்றோர்-ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டத்தில் கீழ்க்காணுவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எஸ். நமசிவாயம், உப தலைவர்: திருமதி வி. வீரகத்தி, செயலாளர்; திரு. எம். ஸ்ரீபத்மநாதன், பொருளாளர்: திரு. வி. கந்தப்பு. (க)

### உயர்வகுப்புநடத்த அனுமதி

யாழ்ப்பாணம், சனி

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் 77-ம் ஆண்டு தேசிய பொதுக்கல்வித் தராதரப்பத்திரம், உயர்தர விஞ்ஞான மட்ட நெறிநடத்துவதற்கான அனுமதி கல்விஇலாகாவினல் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வகுப்பிற்கு மாணவர்களின் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. (க)

# வேற்றுமையில் ஒற்றுமை காண நாம் விரும்பினாலும் அவர்கள் விரும்பவேண்டுமே!

## நாவேந்தனுக்கு மேலைப்புலோலி நடராசா பதில்

அன்பார்ந்த நாவேந்தன் அவர்கட்கு:

நாவன்மை படைத்த தங்களது மேன்மையுறு கருத்துக்களை 19-4-77 திகதிய 'ஈழநாடு' பத்திரிகையிற் படித்துச் சுவைத்த எனக்குச்சுவைமிகுதியாலோ என்னவோ வாந்திக்கிறது.

செழுமைத் தமிழில்செம்மையுறச் செவ்வனே எழுதும் பெருமை கொண்ட உங்கள் எழுத்தை எப்பவும் பெருமதிப்பளித்து அக்கறையோடு படிக்கும் நான் தங்கள் பெயரைக் கண்டதும் ஒருவரிகூட விடாது படித்தேன்.

படிக்கப் படிக்கச் சலிக்காத தங்களது வார்த்தை ஒழுங்குகளைத் திரும்பத் திரும்பப் படித்தேன். பலமாகச் சிந்தித்தேன் ஈற்றில் பேனவைக் கையிலெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளனேன். உண்மையை இதோ தருகின்றேன், காய்தல் உவத்தலின்றி நடுநின்று நலமெய்ப்பதில் தாருங்கள்.

தமிழரசுக் கட்சியில் பல்லாண்டு உட்புறத்திருந்து பல போர்க்களங்கள் கண்ட தாங்கள், இத்தகைய சொல்லறியா மக்கள் போல் மட்டரகமாகச் சொல்வதைப் பார்த்துற்று நோக்குங்கால் உள்ளத்தடித்தளத்தில் ஏதோவொரு திட்டம் - சுயநலத்திட்டம் இருப்பதாகவே எனக்கு மட்டுமல்ல எழுத்தறிந்த, அறியாத அனைவருக்கும் வெள்ளிடைமலையெனத்தோன்றும்.

பண்புமிகு பகுத்தறிவுப் பெருந்தகையான தாங்கள் இந்நாட்டில் தமிழர்க்கென தமிழர் விடுதலைக் கூட்டணி, சுயாட்சிக்கழகம், ஈழத்தமிழ் தொண்டர்சபை ஆகிய அணிகள்—இயக்கங்கள் இருக்கும்போது அவற்றில் ஏதாவதொன்றில் சேர்ந்து தமிழினத்தின் சுயநிர்ணய உரிமைக்காக உழைக்கப் பின்னின்ற போதிலும் ஒற்றையாட்சி முறையில் விருப்புள்ளவர் என்ற போதாவில் கம்யூனிஸ்ட் கட்சியில் அல்லது ஆட்சியை அமைக்கக்கூடிய வேறு ஒரு கட்சியில் (பெரும்பான்மையினரின் கட்சியில்) சேர்ந்து இயங்காது "தமிழர்க்குப் புதிய தலைமை வேண்டும்" என்பது வேடிக்கையும் விந்தையும் பொதிந்ததாகவே திகழ்கிறது.

எவ்வகையிற் சிந்தித்தாலும் நீங்கள் துணிந்து நிற்பது தமிழ்பேசும் மக்களை வீணே குழப்பித் திசை திருப்பி உங்கள் சகாக்களுக்கு வெற்றியை ஈட்டிக்கொடுப்பதற்கென்றே பட்டவர்த்தனமாகத் தெரிகிறது.

இதில் உண்மை இல்லை என்று கூற முடியுமானல் உங்கள் எண்ணம் போல புதிய தலைமை கொண்டாலும் பெரும்பான்மையினரின் கட்சிகளுடன் சேர்ந்து செயற்படுவதென்பது முயற்கொம்பேயாகுமென்று நான் கூறுகின்றேன்.

செயற்திறன் கொண்ட விவேக மூளைசாலியான தாங்கள் தீட்டியுள்ள 14 அம்சங்களும் வரவேற்கக் கூடியவைதான். ஆனல் அவை அனைத்தும் எமக்குப் பழயவையேயாகும். பலமுறை பெரும்பான்மையினரை— ஆட்சியாளரைக் கேட்டு ஏமாந்த அவற்றை இனிமேல் அந்தப் பெரும்பான்மையினரது கட்சிகள் ஏற்றுக் கொள்ளும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

"சுடுபட்ட பூனை அடுப்படியை நாடாது" என்பது போல தமிழ்ப் பேசு மினமும் இனி அவர்களை நாடாது.

ஒரு முறை சுடுபட்டதால பகுத்தறிவற்ற பூனை அப்படி நடக்கும் போது பகுத்தறிவு படைத்தநாம் எப்படிப் பல முறைபட்ட சூட்டையும் எண்ணுது அவர்களுடன் தொடர்பு கொள்வோம்.

பிரதேச சுயாட்சி என்று நீங்கள் குறிப்பிடுவதை எத்தனையோமுறை ஆட்சியில் இருந்தவர்கள் "மாகாண ஆட்சி" என்றபெயரில் கொண்டுவரப் போவதாகப் படக்காட்சி காட்டிவிட்டார்கள். ஆகவே இனியும் நாங்கள் அப்படியான படக்காட்சி பார்த்துக் கண்துடைக்க ஆயத்தமாக இல்லை என்பதையே எல்லாத் தமிழ்பேசும் மக்களும் வெட்ட வெளிச்சமாக முழங்குகிறார்கள்.

இந்நிலையில் முக்கியமாக ஒன்றைமட்டும் நான் சொல்லிவைக்க ஆசைப்படுகிறேன்.

### விவாத மேடை

ஒற்றையாட்சி— தேசியம் என்பவற்றை நீங்கள் வலியுறுத்தலாம். அதற்கு உங்களுக்குப் பூரண உரிமையுண்டு. அதே நேரத்தில் தங்கள் கொள்கை பிழையானதல்ல எனவும் நான் சொல்கிறேன். ஆனல், உங்கள் கொள்கையைச் சிங்கள மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அப்படியாக ஏற்றுக்கொள்ளும் நல்லெண்ணம் அவர்களிடம் இருக்குமாயின் எப்பவோ எமது பிரச்னை தீர்த்துவைக்கப்பட்டிருக்கும்.

### பண்டா—செல்வா ஒப்பந்தம் உதாரணம்

பெரும்பான்மையினரதுஎந்தவொரு கட்சியும் எமது சுயநிர்ணய உரிமையைக்கொடுக்க மாட்டாது. இதனை பண்டாரநாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது துலாம்பரமாகக் காட்டுகிறது. ஆகவே, உங்கள் எண்ணம் போலப் புதியதொரு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுப் புதிய தலைமை ஏற்பட்டுச் சிங்களவர் மத்தியில் பிரசாரம் செய்யப்பட்டால் கிடைக்கும் பரிசு நீங்கள் கருதுவதுபோல மரியாதை, வரவேற்பு, ஒத்துழைப்பு ஆகியன அல்லவென்பதை நிச்சயமாக நம்புங்கள்.

ஒற்றையாட்சியை விரும்புவது பிழையல்ல. அதேநேரத்தில் பிரிவினையை விரும்புவதும் பிழையல்ல. ஒவ்வொரு வழியில் நோக்கினல் இருதிட்டங்களும் சரியானவையேயென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை, ஆனல் இவற்றில் இன்று நாமுள்ளநிலையில் எது சாத்தியமென்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

பலவகையிலும் சுயநிர்ணய உரிமை இழந்து அழிந்தொழிந்துகொண்டிருக்கும் தமிழ்பேசுமினத்திற்கு இன்று வேண்டியது தமது உரிமைகளேயாகும். இவற்றை எந்தச் சிங்கள அரசும் தருமென நாம் நம்புவதற்கில்லை,

உண்மையை உண்மையாகச் சொல்வதென்றல் பெரும்பான்மைச் சமூகம் தமிழ்பேசும் சமூகத்தை உரிமை கொடுத்துச் சேர்த்துவைத்திருக்க விரும்பவில்லை. இதற்கு நேர்மாருக இரண்டாந்தரப் பிரசையாக தம்முள்ளடக்கிவைத்திருக்கவே விரும்புகிறது. எனவே, உங்கள்திட்டம்போல நாம் ஒன்றிவாழ - வேற்றுமையில் ஒற்றுமைகாண விரும்பினலும் சிங்களமக்கள் எம்மோடு ஒத்துழைக்கத் தயாராயில்லை.

உதாரணமாக கணவன் மனைவி ஒத்தாற்ருன் குடும்பம் நடத்தலாம். இதில் ஒருவர் விரும்பியபோதிலும் மறுவர் விரும்பாவிட்டால் குடும்பம் நடத்த முடியாது. இதே போலத்தான இந்த நாட்டிலுள்ள நிலையும். எனவே ஒருபோதும் உங்கள் எண்ணம் போலப் புதியநிலைமை வந்தாலும் ஒற்றையாட்சியில் வாழ்வது முயற்கொப்பேயாகும் என்பதை ஒப்புக்கொள்ளுங்கள்—உங்கள் மனதை முற்ருக மாற்றிக்கொள்ளுங்கள்.

### அவர்களை ஏற்கச்செய்யுங்கள்,

விரும்பினல். பெரும்பான்மையினரது கட்சியில் உங்களுக்கு நம்பிக்கையுள்ள ஒரு கட்சியில் சேர்ந்து உங்கள் திட்டத்தை அவர்களால் ஏற்கச்செய்து ஒற்றுமையை வெளிப்படுத்தி தமிழ்பேசுமினத்திற்காக உழைத்து வெற்றியினைக் காட்டுங்கள் அதன்மேல் நாமும் பின்தொடர்கிறோம்.

இதைவிடுத்து வீணேதமிழ் பேசுமினத்தைக் குழப்பிச் சிதறடிக்காது - புதிய தலைமையைத் தலைமேற் கொள்ளாது வருங்கால சுபீட்சத்திற்காக சிறிதுகாலம் பொறுத்திருக்கும் படி தமிழ்பேசுமினத்தின் சார்பில் வேண்டிக்கொள்கின்றேன்.

வி. வே. நடராசா
மேலைப்புலோலி.

தமிழ்க்காங்கிரஸ் புனரமைப்பு:

# தமிழ்இனத்தின் 99 வீதத்தினர் பதட்டமடைந்துள்ளனர்

—அ.சுப்பிரமணியம்—
சாவகச்சேரி

கடந்த 12-4-77 ஈழநாடு பத்திரிகையில் விவாதமேடை அரங்கில் 'கட்சிரீதியில சிந்திப்பதை விடுத்து இனவிடுதலைக்கு உழைக்கவேண்டும்' என்ற விடயத்தை . வல்வெட்டித்துறையைச்சேர்ந்த கொக்கட்டிப்பாலை பொ கிருபானந்தன் போதியவிளக்கத்தோடு எழுதியிருந்தார். வரவேற்கிறோம்; வாழ்த்துகிறோம்.

மனிதகுலப்பிறந்த அத்தனை பேரும் சிந்திக்கக் கடமைப்பட்டவர்கள். அதிலும் பிரச்னைகள் எழும்போது உளவியல் தத்துவங்களின்படி சிந்திக்கவும், தீர்வுகாணவும் வேண்டும். எமது தமிழ்ப் பேசும் இனம் ஈழத்தின் தனிமனிதன் சுதந்திரம்வேண்டி; அமரர் உயர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம். ஐம்பதுக்கு ஐம்பது கோரிய காலத்திலிருந்து சிந்திக்கத் தொடங்கியது. ஆனல் ஒருவருக்கொருவர் முட்டிக்கொள்ளும் உணர்வுகளாலும், நானே நீயோ என்ற முதன்மை ஊக்கங்களாலும் தள்ளப்பட்டுத் தமிழ்ப் பிரமுகர்கள் சின்னபின்ன மடைந்தார்கள். தமிழ்விடுதலைஓடம் கரைசேருவதற்குப் பதிலாக நடுக்கடலுக்குத் தள்ளப்பட்டு, பட்டம் பதவி என்றநீர் ஓடத்திலுள் புகுந்து ஓடம் அமிழப் போகும் தருணத்தில் தமிழ்த்தலைவர்களின் சிந்தனையும் நல்லதை ஏற்கும் பண்பும் எழுச்சி பெற்று, யார்குற்றியும் அரிசியாகட்டும் என்ற முடிவினைத் தோற்றுவித்தது. சாதிமத பேதமற்ற, ஈழம்வாழ் தமிழ் மக்களின் அபிலாஷைகள் தீர, கூட்டணிமலர்ந்தது. ஓடத்தினுள் புகுந்த நீர் தமிழர்கூட்டணியால் வெளியேற்றப்பட்டுக்கொண்டிருக்கிறது. மேலும் நீர் செல்லாதவாறு இளைஞர் பேரவையும் பொ. கிருபானந்தனையும், என்னையும் போன்ற பலலட்சம்துரும்புகள் தடுத்துக் கொண்டுஇருக்கிறோம். கடலில் ஓடம் தாழும்போது, எம்மவர்கள் ஒரு பக்கமாக வாருங்கள் என்று ஒருவர் தன்உறவினரை அழைப்பதுபோல அன்புத் தம்பி மதிப்பிற்குரிய, குமார் பொன்னம்பலம் காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்தநினைப்பதுகண்டு தமிழ் இனத்தின் 99 வீதத்தினர்பதட்டமடைந்துள்ளார்கள்.

தமிழ்இன ஓடமே தாழப் போகும்போது உறவினர் ஒரு பக்கம் பலத்தைக்கூட்டி இழுப்பதில் என்ன சாந்தி கிடைக்கப்போகிறது. அமரர் உயர் திரு. பொன்னம்பலம் எப்படி வாழ்ந்தார்? என்ன செய்தார்? என்பதல்ல இப்போதுதேவை! இனவிடுதலைக்கு எவ்வளவு பாடுபட்டார். சாதிமத கட்சி சார்பற்று தமிழர் விடுதலைக் கூட்டணி உதயமானபோது, அவர் எவ்வளவு உளமார ஏற்ருர் என்பதையே சிந்திக்க வேண்டும். கூட்டணியை எதிர்த்தாரா? தமது கட்சியைப் பலப்படுத்த முயன்ருரா? எவ்வளவு ஈடுபாடாக இருந்தார் என்பதையே மதிக்க வேண்டும்.

இன்னும்சிலர் சாதிப் பிரிவினையை முன்வைத்து முன்னுக்கு வர முயற்சிக்கிருர்கள். விருந்து கொடுப்பதனுல். விருந்துண்பவனும் இன்முகத்தோடு பழகினுல்தான் இனிய விருந்தாய் அமையும். அடுத்து சுயாட்சிக் கழகம் என்ற நல்லதோர் இயக்கம். ஐயோ எல்லாம் ஒருநோக்கம்தானே! குடும்பத்

(7-ம் பக்கம் பார்க்க)

# இரு இயக்கங்களும் சேர்ந்தால் தான் இலட்சியம் விரைவில் நிறைவேறும்

கனம் தங்கிய சுந்தரலிங்கம்
ஐயா!

19-4-77-ல் ஈழநாடு பத்திரிகையில் ஈழத்தமிழர் தொண்டர் சபை கூட்டணியை எதிர்த்துபோட்டியிடும் என்று கூறியிருந்தீர்கள். நான் மாத்திரம் அல்ல என்போன்ற இளைஞர்களும் அதை வாசித்தவுடன் கவலையடைந்தோம். ஐயா ஏன் இந்தப்போட்டி உங்களுக்கு. தமிழர் கூட்டணி என்ற ஓர் இயக்கத்தில் தமிழ்க் காங்கிரஸ்- தமிழரசுக்கட்சி வேறு பல கட்சிகள் சேர்ந்து இருக்கிறது. கூட்டணியை ஏன் இன்னும் சின்னபின்னமாக்குகிறீர்கள்? நீங்களும் தமிழீழத்தை தான் காண போராடுகிறீர்கள் கூட்டணியும்தமிழீழத்தை காணத்தான் போராடுகின்றது. ஆனல் இரு இயக்கங்களும் சேர்ந்து போராடினல் நமது இலட்சியம் விரைவில் நிறைவேருதா?

நான் ஒரு தமிழ் இளைஞன் என்ற சார்பில் இக்கடிதத்தை எழுதுகின்றேன். நீங்கள் முன் ஒருமுறை ஈழநாடு பத்திரிகைக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் சிறைசென்ற இளைஞர்களைத்தான் தேர்தலில் போட்டிக்கு நிறுத்தவேண்டும். 40 வயதுக்கு மேற்பட்டவர் ஒருவரையும் தேர்தலில் நிறுத்தக் கூடாதுஎன்றுகூறியிருந்தீர்கள் இந்தப் பங்கீடுகளுக்குள்ளேயிருந்து தெரிகிறதல்லவா நீங்கள் கூட்டணியை சிதைத்துவிடப் பார்க்கிறீர்கள் என்று. ஐயா நான் இக்கடிதத்தை வரையமுற்பட்டது ஏனென்ருல் நீங்களும் கூட்டணியுடன்சேர்ந்து ஒத்துழைக்குமாறு வேண்டிக் கொள்வதற்காகத்தான்.

ரி. மணிமாறன்
மாதகலூர்.

# 'கர்நாடகசங்கீதம் தமிழருக்கு கிடைத்த பெரும் கொடை'

## நீதிபதி பாலகிட்ணர் உரை

சாவகச்சேரி, வெள்ளி

ஒருநாட்டின் இசைக் கலைஞர்கள் பிறநாட்டுக்குப்போய் அங்கே கலைவழங்கி அந்நாட்டு மக்களாற் கௌரவிக்கப்பட்டு விருதுகள் பெறுவது அவர்களின் கலைத் தராதரத்திற்குக் கிடைத்துள்ள தனிப் பெருமையாகும். இந்த நிலை எமது கர்நாடக சங்கீதத்தின் மகத்துவத்தால் கிடைக்கும் பெருமையாகும்''

மலேசியாவில் புகழ் ஈட்டி மீண்ட சங்கத்தானை நாதஸ்வர மன்னர் திரு.மு.பஞ்சாபிகேசனின் புதல்வன் செல்வன் நாகேந்திரன் தென்மராட்சி மக்கள் சார்பில் ''நாதஸ்வர மணி'' என்ற பட்டம் பொறித்த தங்கப்பதக்கத்தை அணிந்து கௌரவித்த போது சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கி.பாலகிட்ணர் மேற்கண்டவாறு கூறினார்.

சாவகச்சேரி டிறிபேக்கல்லூரியில் விழாத்தலைவர் திரு. எஸ்.எஸ்.கே திரவியநாயகம் தலைமையில் ஆரம்பித்த இவ்விழாவில் இசைவாணி திருமதி பூமணி இராசரத்தினம் தமிழ்த்தாய் வணக்கம் பாடினார்.

செயலாளர் திரு.மு.சபாரத்தினம் பாராட்டுப்பத்திரம் வாசித்து வழங்கினார். இசைப்புலவர் சி.செல்லத்துரை உபசாரப்பாக்கள் இயற்றிபாடினார். திரு. பாலகிட்ணர் தொடர்ந்து பேசும்போது தமிழருக்குகிடைத்துள்ள சகல கலைகளிலும் கர்நாடகசங்கீதம் அவர்களுக்குக் கிடைத்துள்ள பெரிய கொடையாகும்.

சர்வதேசரீதியில் பெருமையிட்டும் கலையாயிருப்பது அதற்குக் கிடைத்துள்ள தனிச்சிறப்பாகும். இளங்கலைஞர்கள் முன்னுக்குவர அவர்களை போற்றுவதும் கௌரவிப்பதும் சங்கீத கலைக்கு மக்கள் செய்யும் தொண்டாகும். இவ்விழாவில் அனேக வித்துவான்கள் சமுகமளித்து இசைக்கலைஞரை பாராட்டுவது கலைக்குச் செய்யும் தொண்டாகும். வித்துவான் முன்னிருந்து கலைஞர் வழங்கும் கலையை அனுபவித்து ஆமோதித்து தாளம் போடும்போது உண்மையாக எந்தக்கலைஞருக்கும் உற்சாகம் ஊட்டுவதும் அவர் தன்கலையறிவில் இன்னும் மேலோங்க எண்ணுவதும் காமே வந்தடையும் கலைஞர்களை உயர்த்திவைப்பது பொது மக்களின் கடமையாகும். நம்நாட்டில் மட்டமானசங்கீதமன்றி உயர்தர சங்கீதம்வளர நாம் எல்லோரும் பாடுபட வேண்டும்'' என்றார்.

சாவகச்சேரி எம்.பி.திரு வி.என்.நவரத்தினம் பேசும்போது பிறநாட்டுக்கலைஞர்கள் இங்குவரவும் எம்நாட்டு கலைஞர்கள் பிறநாடு செல்லவும் ஏற்றவகையில் இசைப்பாலத் தொடர்புகள் அமைக்கப்பட நாம்முயற்சி எடுக்க வேண்டும் என்றார்.

உதவி அரசாங்க அதிபர் திரு.இ சிதம்பரப்பிள்ளை, டிறிபேக்கல்லூரி அதிபர் திரு. க.பாலச்சந்திரன் சங்கீத பூஷணம் சிவிஞசித்தம்பி, சங்கீதபூஷணம்க குமாரசாமி, திரு அ. பொ. செல்லையா கைதடி சைவ அனுதை இல்லச் செயலாளர் திரு ஆ. கந்தையா என்போர் பாராட்டுரை வழங்கினர்.

தொடர்ந்து செல்வன் நாகேந்திரன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி நடைபெற்றது. (க)

# ''நல்லை நகர் நாவலர்:'' இன்று ஆலோசனைக்கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாசாரிய சுவாமிகள் பிரதான பாத்திரம் ஏற்று நடிக்கும் 'நல்லைநகர் நாவலர்' திரைப்படம்பற்றிச் சில ஆலோசனைகளைப் பெறுவதற்கான கூட்டம் ஒன்று நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் இன்று சனிக்கிழமைநடைபெற உள்ளது.

இப்படத்தின் தயாரிப்பாளர் திரு. பா. சண்முகநாதன் இக்கூட்டத்தைக் கூட்டுகிறார்.

கலைஞர்களும் சைவஅறிஞர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு புதிய படத்திற்கான ஆலோசனைகளை வழங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

# ''எம்.பி.பதவிதான் இன்று சிறந்த தொழிலாகும்''

தெல்தேனியா, வெள்ளி

சுதந்திரக் கட்சியில் ஒரு அமைச்சராக இருப்பதிலும் விட ஐக்கிய தேசிய கட்சியில் ஒரு சாதாரண எம்.பி. யாக பணியாற்றுவது சிறந்ததாகும்.

தெல்தேனியா தொகுதியில் நடந்த கூட்டமொன்றில் பேசிய முன்னாள் எம். பியான திஸா கபுகொடுவாமேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும் கூறியதாவது: ஐக்கிய தேசிய கட்சியைத் தவிர தான் வேறு எந்தக் கட்சியையும் ஆதரிக்கமாட்டேன்.

தற்போதைய கட்சி அமைப்பாளர் ஒரு அந்நியராக இருக்கிறார். கட்சி மேலிடம் இதில் மாற்றம் செய்யாவிடில் வீணுக ஒரு தொகுதியை இழக்க வேண்டியேற்படும். கட்சியின் விஸ்வாசமுள்ள உறுப்பினர் என்ற முறையில் நான் இத் தொகுதியில் யூ. என். பியின் வெற்றிக்காகப் பாடுபடுவேன்.

டாக்டர் ஏ. பி. ஜி. செனிவரத்ன பேசும் போது கூறியதாவது: கடந்த வருட காலத்தில் எம். பிக்கள், மக்களின் பணத்தில், சுகபோகங்களை அனுபவித்து வந்தனர். இன்று இந்நாட்டில் ஒரு எம். பியாக வருவதுதான் சிறந்த தொழிலாகும். (க)

# சைக்கிளில் சென்ற மாணவன் லொறிக்கு பலியானுர்!

சாவகச்சேரி, வெள்ளி

சைக்கிளில் வந்து கொண்டிருந்த 12வயது மாணவன் மரமேற்றிய லொறி ஒன்றுக்குப் பலியானுர்.

இவ்விபத்து சாவகச்சேரி யாழ். கண்டி வீதியில் நடந்தது.

சாவகச்சேரியைச் சேர்ந்த சண்முகம் இரத்தினசிங்கம் என்னும் மாணவரே இவ்வாறு பலியானுர். விபத்து நடந்ததும் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானுர்.

குறுக்கு வீதியிலிருந்து வந்து கொண்டிருந்த பையன் யாழ். கண்டி வீதியில் கிழக்குத்திசையாக வந்த மரமேற்றிய லொறி அவ்விடத்தில் வைக்கோல் ஏற்றிய லொறிஒன்றை விலத்திச் செல்ல முயற்சிக்கும்போது இவ்விபத்து நடந்தது சம்பவம் நடந்த இடம் வளைவாக இருப்பதனுல் முன்னரும் பல விபத்துக்கள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

சாவகச்சேரி பொலிஸ் சார்ஜன்ட் திரு. ஜெயவர்த்தன, பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. வி. இராமலிங்கம் ஆகியோர் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு சென்று விசாரணை செய்தனர். யாழ் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். அமிர்தலிங்கம் மரண விசாரணை செய்தார். சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சுப்பிரமணியம் பிரேத பரிசோதனை செய்தார்.

விபத்து மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. லொறிச் சாரதி மே மாதம் 2ந் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். லொறி சாவகச்சேரி பொலிசாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. (க)

# 3 கோடி 90 லட்சம் ரூபா தேயிலை கொள்வனவு

கொழும்பு, வெள்ளி

சோவியத் யூனியன் இலங்கையிடமிருந்து 3 கோடி 90 லட்சம் ரூபா பெறுமதியான 26 லட்சம் கிலோ கிறும் தேயிலையை கடந்த வருடம் கொள்வனவு செய்தது.

இவ்வருடமும் சோவியத் யூனியன் இலங்கையிடமிருந்து அதிகதேயிலையைக் கொள்வனவு செய்யவிருப்பம் தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டுமாதங்களில் மட்டும் ரஷ்யா 1 கோடியே 27 லட்சம்பெறுமதியான 9 லட்சத்து 12ஆயிரம் கிலோமீட்டர் தேயிலையைக்கொள்வனவுசெய்துள்ளது. —— (இ)

# தரமற்றகருவாடு விநியோகம்: மக்கள் அதிருப்தி

கொழும்பு, வெள்ளி

தற்போது கூட்டுறவுக்கடைகளில் விநியோகிக்கப்படும் கருவாடுஉண்பதற்கு உதவாததாக இருக்கின்றது என பாவனையாளர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

பங்கீட்டுக்கு வழங்கப்படும் இக்கருவாடு அசுத்தமானதாக இருப்பதால் இதனை வாங்க பாவனையாளர்கள் தயங்குகின்றனர்.

இதேநேரத்தில், பல அங்கத்தவர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு மாதமொரு முறை ஒருகட்டிசன்லைட் சவர்க்காரமே விநியோகிக்கப் படுகிறது. இச்சவர்க்காரம் ஒரு நாள் பாவனைக்கே போதுமானதாக இருக்கிறது என்றும் பாவனையாளர் அங்கலாய்க்கின்றனர். (உ)

# இடமாற்றம்

பண்டத்தரிப்பு, வெள்ளி

பூநகரி அரசினர் வைத்தியசாலையில் மருந்துக் கலவையாளராகக்கடமையாற்றிய திரு.எஸ் கனகலிங்கம் இம்மாதம் தொடக்கம் பளை அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். பளை வைத்தியசாலையில் கடமையாற்றிய திரு. ஏ. துரைராசா பூநகரிக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். (உ)

# சித்திரத் தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், சனி

காரைநகர் கருங்காலி ஸ்ரீ முருகமூர்த்தி கோவில் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இம்மாதம் 29-ம் திகதி பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய 'சிற்பகலாமணி' ஆ ஜீவரத்தினம் ஆச்சாரியாரும் சகோதரர்களும் இச்சித்திரத் தேரை உருவாக்கினர். (இ)

...

# கந்தபுராண படனம்

யாழ்ப்பாணம், சனி

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீகற்பகவிநாயகர் கோவிலில் மூன்றுமாத காலமாக நடைபெற்றுவரும் கந்தபுராண படனத் தொடர்பாக நாளை சூரபன்மன் வதைப்படலம் பயன் சொல்லப்படும்.

அன்று காலை 8 மணி முதல் இரவு 7மணிவரை தொடர்ந்து புராண படனம் நடைபெறும். (க)



RIO (Jaffna) Daily 4 Shows
SAMSON THE MIGHTY
Color — Scope

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) திரைசரி 4 காட்சிகள்
ஃ சிவாஜி (இருவேடம்) ஃ ஜெயலலிதா ஃ சுந்தரராஜன் நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

12-வது வெற்றி வாரம்!
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

REGAL (JAFFNA) Daily at 4 45,7 00&9-30p m. only
அதிசயம்! ஆனல் உண்மை! பார்க்காதவர்கள் பார்க்கத்துடிக்கிருர்கள் பார்த்தவர்கள் பரவசமடைகிருர்கள். உலகெங்கிலும் ஓடி எண்ணற்ற ரசிகர்களின் ஆதரவைப் பெற்று இன்று உங்கள் மத்தியில் காட்சியளித்துக் கொண்டு இருக்கிறது. செக்கஸ் (CIRCUS) இன்னும் சில தினங்கட்கு மட்டும்தான். இன்றே பார்த்து மகிழுங்கள் தவறவிடாதீர்கள்.
For All Good Children From 8 to 80!
"CIRCUS"
(A Full Length Circus Film) (Color)

வெலிங்டன் (யாழ். நகர்) ஃ முத்துராமன் ஃ சுஜாதா நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 (யாழ். நகர்) விஜயகுமார் - லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

கடைசி இரு தினங்கள்
ராஜா (யாழ். நகர்)
ஏ.வி.எம்.ராஜன் - சாரதா
முத்துராமன் - நாகேஷ்
[தினசரி 4 காட்சிகள்]
துலாபாரம்
(தமிழ் - புதிய பிரதி)

ராணி (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜமுனு - வீரப்பா நடித்த
மருதநாட்டுவீரன்
29-4-77 முதல்
புரட்சித் தலைவரின் மகத்தானபடைப்பு
நாளை நமதே

மினுவாங்கொடை வங்கியில்

# 3 லட்சம் ரூபா நகைகள் துப்பாக்கி முனையில் கொள்ளை

கொழும்பு, வெள்ளி 3 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும்ரொக்கப்பணமும் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம்ஒன்றுமினுவாங்கொடை ப. நோ. கூ. ச. கிராமவங்கியில் இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் மேல்நாட்டுப்பாணியில் உடையணிந்த 6 ஆயுதம் தாங்கிய வாலிபர்கள் துப்பாக்கிமுனையில் இக்கொள்ளையை நடத்தியுள்ளனர்.

வங்கியினுள் பிரவேசித்த இந்த வாலிபர்கள் துப்பாக்கி முனையில் வங்கியின் மனேஜரைப் பயமுறுத்தி அங்கிருந்த இரும்புப் பெட்டியை பலாத்காரமாகத் திறக்கச்செய்து அதனுள் இருந்த 3 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் 5,300 ரூபாவையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனராம்.

இக்கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் கார் ஜாஎலப் பகுதியில் கைவிடப்பட்டநிலையில்பொலிசாரினல் கண்டுபிடிக்கப்பட்டது.

கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் பொதுமக்களினல் இவ்வங்கியில் அடைவு வைத்ததாகக் கூறப்படுகிறது.

மினுவாங்கொடைப் பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர். (இ)

## தமிழ்இனத்தின்..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் பிரிவு இருப்பது அடுத்த வீட்டாருக்குத்தானே பெருமகிழ்ச்சி. எமக்கோ? நாம் விட்டுக்கொடுத்தோ, விடாமல் கொடுத்தோ நல்லதை ஏற்போம்.

ஒருவரின் புகழ் வளரும் போது அதை மட்டம்தட்டி, நான் புகழ் அடையவேண்டும் என்ற எம [illegible] ததை கைவிட்டு அத்தகைய சுயநல எண்ணங்களைநாம் சிந்தனையால் வெல்லவேண்டும். ஒரு குடும்பத்தில் தந்தையின் புகழ் வளர்ந்தால் அக்குடும்ப அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் புகழில் பங்கு கிடைப்பது என்பதுநிச்சயம். அந்தப்பெருநோக்கில்தமிழினம்வாழவேண்டும். தனையனுலும், தந்தையிடம் தவறு கண்டால் எடுத்துக்காட்டி, நல்ல பாதையில் தமிழ் இனத்தை வழிநடத்த ஒவ்வொரு தமிழனும் முயலவேண்டும். அப்போதுதான் தமிழ்இனம் விடுதலை அடையும்; தமிழர்கோரிக்கை நிறைவேறும்; தமிழ்ஈழமே மலரும்.

தமிழ்இனத்துக்கு,தமிழ்இன விடுதலைக்கு, ஊறு ஏற்படாத வகையிலே,தமிழர் கூட்டணிக் கட்சி என்ற ஒரே குடையின் கீழ், எமது கோரிக்கைகளை வென்றெடுக்க, எம்மால் முடிந்தளவு திறமைகளைக் காட்டச் சிந்திப்போமா?

## இரட்டைக் கொலை சந்தேகநபர்கள் சரண்

யாழ்ப்பாணம், சனி அளவெட்டி இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் சுன்னுகம் பொலிசாரால் தேடப்பட்டுவந்த ஏனைய சந்தேக நபர்கள் நால்வரும் மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. எம். டி. யேசுரத்தினம் முன்னிலையில் சரணடைந்தனர்.

இவர்களையும் மே மாதம் 20 ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

இந்த இரட்டைக் கொலை தொடர்பாக இன்ஸ்பெக்டர் ஜனுப் இ. ஏ. ஏ. காதர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்திருந்த பி. கந்தையா, ஜே. அழகநாயகம் என்ற இருவர் ஏற்கனவே மே 2வரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

எஸ். செல்லத்தம்பி, கே. துரைராசா என்பவர்கள் உட்பட நான்கு சந்தேக நபர்களுமே நீதிபதி முன் சரணடைந்தவர்களாவர்.

விற்பனையாகின்றன:
1977-ம் ஆண்டுக்கான புதிய ஞானசுரபி வெளியீடு
புலமைப்பரிசிற் பரீட்சை பயிற்சிகள்
5-ம் வகுப்பு
கடந்தகாலங்களில் பல்லாயிரக்கணக்கானமாணவர்கள் படித்துப் பயன் அடைந்தார்கள்.

| | | |
|---|---|---|
| பொது உளச்சார்பு: | விலை ரூபா | 5-00 |
| கணிதப் பயிற்சி: | ,, ,, | 3-00 |
| தமிழ்மொழிப் பயிற்சி; | ,, ,, | 3-00 |

ஞானசுரபி வெளியீடு எலைக் கேட்டு வாங்குங்கள்.
வெளியீடு:
ஞானசுரபி புத்தகக் கம்பனி
217, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.
5956

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30 6-30, 9-30
சனி ஞாயிறு 10-30
முத்துராமன் - ஜெயா
சுடரும்சூறுவளியும்

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனிஞாயிறு2-306-30 9-30
ஜெமினி — சாவித்திரி
கொஞ்சும் சலங்கை

நாகமஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
T. M. சௌந்தரராஜன்
அருணகிரி நாதர்

சீட்டு இல ........
பொதுத் தேர்தல் 1977
பொதுமக்கள் நியமனச்சிட்டு
தொகுதி............... பெயர் .........
......................... வயது......... அவர்களை நியமிக்க விரும்புகிறேன். 25 சத முத்திரை இத்துடன் அனுப்புகிறேன்.
தொழில்...................
விலாசம்......................
.............................. .........................
(கையொப்பம்)
அனுப்ப வேண்டிய முகவரி:
காரியஸ்தன்
ஈழத்தமிழ் தொண்டர்சபை
"மகரலிங்கவாசா" கீரிமலை
(ADVT)


திரைக்கதை வசனம்: பாலமுருகன்

யாழ். வின்ஸர் வெண்திரையில்
இப்பொழுது நடைபெறுகிறது
தினசரி 4 காட்சிகள்
நடிகர் திலகம் சிவாஜி கணேசன் உஷா நந்தினி
(இரு வேடங்களில்)
சௌகார்ஜானகி, சுகுமாரி M.பானுமதி M.R.R.வாசு
வி. கே. ராமசாமி சசிகுமார் மாஸ்டர் ரகுராமன் நடித்த
சிவாஜிகணேசன் பெருமையுடன் அளிக்கும்
விஜயவேல் பிலிம்ஸாரின்
மனிதனும் தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மென் கலர்) டைரக்ஷன்: பி. மாதவன் பி. ஏ.

ஈழநாடு
The EELANADU

# சுயாட்சிக்கழகம் வடக்கில் சகலதொகுதிகளிலும்போட்டி

யாழ்ப்பாணம், சனி. தமிழர் சுயாட்சிக் கழகம், அடுத்த தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான அறிக்கையொன்றை மே மாதம் முதலாம் தேதிவெளியிடவிருப்பதாக கழகப் பிரமுகர் சட்டத்தரணிஸ்ரீகாந்த் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக்கூட்டணியுடன் சுயாட்சிக்கழகம் இணைவதற்கான சாத்தியக் கூறுகள் ஏற்படாத பட்சத்தில் மே மாதம் 15ம் தேதி கழகத்தின் அபேட்சகர் பட்டியல் வெளியிடப்படுமென்றும் அவர் கூறினுர்.

ஏற்படாத பட்சத்தில், வடக்கில் சகல தொகுதிகளிலும் கழகம் அபேட்சகர்களை நிறுத்துமென்றும், கிழக்கிலும் சில தொகுதிகளில் அபேட்சகர்களை நிறுத்துமென்றும் கூறினுர்.

கூட்டணி சுயாட்சிக் கழகப் பேச்சுவார்த்தை பற்றிய கூட்டணியின் முடிவு இம்மாத இறுதிக்குள் கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கத்தால் கழகத்துக்கு அனுப்பி வைக்கப்படுமென எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினுர்.

கூட்டணியுடன் இணைப்பு

## கழகத்துக்கு இந்த நோக்கம் இல்லை

யாழ்ப்பாணம், சனி

கூட்டணியிலிருந்து எந்த ஒரு கட்சியும் வெளியேறும் என்பதுபற்றியோ அல்லது அத்தகைய வெளியேற்றம் ஒன்று நிகழுமாஞல், அதை வைத்து அரசியல் ஆதாயம் தேடவேண்டும் என்பதுபற்றியோ தமிழர் சுயாட்சிக் கழகத்திற்கு எள்ளளவும் அக்கறை கிடையாது.

கூட்டணிக்கும், தமிழர் சுயாட்சிக்கழகத்திற்கும் நடந்த பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட சுயாட்சிக்கழக குழு உறுப்பினர் ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பேச்சுவார்த்தையின்போது மேற்கண்டவிதத்தில் எவரும் பேசவில்லையென்றும், அப்படிப் பேசியதாக பத்திரிகையொன்றில் (ஈழநாடல்ல) வெளிவந்த செய்தி தவறுசுமென்றும் அவர் கூறினுர். (க)

சீன. கம்யூ. தொழிற்சங்கங்களின்

# எழுச்சியும் உணர்ச்சியும கலந்த மே தின ஊர்வலம்

## யாழ்.நகரில் நடாத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் எழுச்சியும் உணர்ச்சியும் கலந்த பிரமாண்டமான மேதின ஊர்வலத்தை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை இலங்கை சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி தொழிற்சங்கங்கள் செய்துவருகின்றன.

வடக்கில் இயங்கும் பதினைந்திற்கு மேற்பட்ட தொழிற்சங்கங்களும், வாலிபர் இயக்கங்களும், வெகுஜன இயக்கங்களும், மாதர் முன்னணிகளும், விவசாயிகள் சம்மேளனமும் கூட்டாகச்சேர்ந்து இந்த ஊர்வலத்தை நடாத்த ஏற்பாடு செய்துள்ளன.

திருநெல்வேலிச் சந்தியில் அன்றையதினம் பிற்பகல் 2-30 மணிக்கு ஆரம்பமாகும் ஊர்வலம் பலாலிவீதி, காங்கேசன்துறை வீதி, முஸ்லிம் வட்டாரம், மார்னிப்பாய் வீதி, ஸ்ரான்லி வீதி, மின்சார நிலைய வீதி, ஆஸ்பத்திரி வீதி, மணிக்கூட்டு வீதி வழியாக யாழ். சுங்க இலாகாவிற்கு அருகாமையிலுள்ள கடற்கரை மைதானத்திற்கு வந்தடைந்து அங்கு கூட்டம் நடைபெறும்.

மேதின கமிட்டி அமைப்பாளர் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் மேதின ஊர்வலத்திற்கான ஒழுங்குகளைச்செய்து வருகின்ருர். (க)

# யு. என். பி.-சுதந்திரக் கட்சிகள் பஸ் ஏற்பாடு

## மேதினத்துக்கு வடக்கிலிருந்து செல்வதற்கு

யாழ்ப்பாணம், சனி

கொழும்பில் நடைபெறவிருக்கும் மேதினஊர்வலத்தில் கலந்து கொள்வதற்கு, வடக்கிலிருந்து ஐக்கியதேசியக்கட்சி, சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் தனித்தனியேசெல்லவிருக்கிறுர்கள்.

இவ்விரு கட்சிகளும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்குச் செல்ல பஸ்கள் ஒழுங்கு செய்திருக்கின்றன.

ஒவ்வொரு கட்சியினரும், எத்தனை பஸ்கள் ஒழுங்குசெய்துள்ளார்கள் என்பது இம்மாதம் 28 [illegible] தெரியவரும் என இ.போ.உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

கந்தர்மடத்திலுள்ள ஒரு வீட்டில்

# ரூ.70,000 பெறுமதியான சேலைகள் அகப்பட்டன

யாழ்ப்பாணம், சனி

கந்தர்மடத்தில் உள்ள ஒரு வீட்டில் நேற்று முன்தினம் இரவு, சுமார் 70,000 ரூபா பெறுமதியான உயர் ரக ஜவுளிகளையும், கூறைச்சேலைகளையும் குருநகர் பொலிஸ் கோஷ்டியினர் கைப்பற்றினுர்.

குருநகர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. ஹேவா தலைமையில், சார்ஜண்ட் கே.ரூபசிங்கா, கான்ஸ்டபிள்களான கே. என். பிள்ளை, கே. சந்திரதாசா, ரத்வேவதனபால ஆகியோர் இக்கோஷ்டியில் சென்றிருந்தனர்

ரகசிய தகவல் ஒன்றைத் தொடர்ந்து இக்கோஷ்டியினர் இரவு 7 மணிக்கு பலாலி வீதியில் உள்ள அவ்வீட்டை திடீர் முற்றுகையிட்டு சோதனை நடத்தினர்.

உயர்ரக சேட் துணிகள் கூறைச்சேலைகள் விலைஉயர்ந்த சேலைகள் இவ்வேட்டையில் சிக்கின.

இருசந்தேக நபர்களையும் பொலிஸார் கைதுசெய்து ஜவுளிகளையும் கைப்பற்றிச் சென்றனர்.

நேற்றுக் அதிகாலை [illegible] மணிக்கு, சந்தேகநபர்களும் ஜவுளிகளுடன் சுங்கப்பகுதி அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சுங்கப்பகுதியின் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (க)

பஸ் லொறி வண்டி மோதல்

# புத்தூரில் நடந்த விபத்து: லொறிச்சாரதிக்குகாயம்

புத்தூர், வெள்ளி

புத்தூர் கிராமசபைக்கு முன்னுல், யாழ். பருத்தித்துறை வீதியில் இன்று காலை நடந்த லொறி விபத்தொன்றில் லொறிச்சாரதி செல்வராசா காயமடைந்தார், லொறியினுல் மோதப்பட்ட மாட்டு வண்டி பலத்த சேதமடைந்தது. இவ்விபத்தில் சிக்கிய பஸ் ஒன்றும் சேதமடைந்தது.

வீதி ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த மாட்டு வண்டிமீது ஆவரங்காலை நோக்கிச்சென்றுகொண்டிருந்த லொறிமோதிய சமயம் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த இ. போ. ச. பஸ் லொறியுடன் பலத்த சத்தத்துடன் மோதியது.

பஸ்ஸிலிருந்த பிரயாணிகளுக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை. அவ்வீதியால் வந்த வாகனங்கள் யாவும் சுன்னுகம் வீதிவழியாக- இராசவீதிவழியாக திசைதிருப்பிவிடப்பட்டது. (க)

# தொழிற்சாலையில் ரூ. 4 ஆயிரம் கொள்ளை

கல்வியங்காடு, வெள்ளி

யாழ்ப்பாணத்திலுள்ள தொழிற்சாலை ஒன்றில் சுமார் 4000 ரூபா கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் கண்டிவீதியில் உள்ள பிரபல தொழிற்சாலை ஒன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது: மேற்படி தொழிற்சாலையின் பின்பக்கத்திஞல் நுழைந்த திருடர்கள் அங்கிருந்தபைப் உபகரணங்களைத திருடியதுடன் மலசலகூடம் வழியாக காரியாலய அறைக்குள் நுழைந்து அங்குள்ள லாச்சியை உடைத்து ரொக்கப்பணத்தையும் திருடிச் சென்றுள்ளனராம்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி திரு. தாமோதரம்பிள்ளை புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளார். உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்த பொலிசார் கைவிரல் அடையாளங்களைப் பதிவுசெய்துள்ளனர். விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இதுவரை எவரும் கைதாகவில்லை. (இ)

## பொன்விழா

இமையாணன், வெள்ளி

இமையாணன் சிவனடிச் சங்கத்தின் பொன்விழா புதுவருடதினத்தன்று சிவனடி வாசிகசாலைக்கு அருகாமையில் உள்ள மைதானத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

தலைவர் திரு. த. ஜெகநாதபிள்ளை தலைமையின்கீழ் நடைபெற்ற இவ்விழாவில் முதல் நாள் நிகழ்ச்சியாக அன்று பகலில் விளையாட்டுப்போட்டி நடைபெற்றன. அதையடுத்து அன்றுஇரவு "காத்தவராயன்" என்னும் நாட்டுக்கூத்து உட்பட பல நாடகங்களும், நடன நிகழ்ச்சியும், தேவார பேச்சுப் போட்டிகளும் நடைபெற்றன. (இ)

## ஊர்வல ஏற்பாடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள்பற்றி ஆராயவிருக்கிறது தமிழ் இளைஞர் பேரவையினரும் இன்று கூடி மேதின ஒழுங்குகள்பற்றி ஆலோசிக்கவிருக்கின்றனர்.

கூட்டணியினர் கம்யூனிஸ்ட் கட்சியுடன் சேர்ந்தா? அல்லது தனியாகவா மேதின ஊர்வலத்தை நடத்துவார்கள் என்பது இன்னும் திட்டவட்டமாக முடிவுசெய்யப்படவில்லை.

தமிழ்த் தொழிற்சங்க கூட்டணியைச்சேர்ந்தசிலதொழிற்சங்கங்கள் கம்யூனிஸ்ட்கட்சி தொழிற்சங்கங்களை சேர்க்கக்கூடாதென தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

கம்யூனிஸ்ட்கட்சி சார்பான தொழிற்சங்கங்களையும் சேர்த்து கூட்டணியின் மே தின ஊர்வலத்தையும் பொதுக்கூட்டங்களையும் நடத்துவதற்கு வாய்ப்பு இருப்பதாகக் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

## இளைஞா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையிலும் நடைபெறும்.

இளைஞர் பேரவைக் கூட்டத்தில், இன்றைய அரசியல் நிலைமைபற்றியும்மேதின ஒழுங்குகள்பற்றியும் ஆராயப்படவிருக்கிறது.

காங்கிரஸ் வாலிப முன்னணிக்கூட்டத்தில் தேர்தல் தொடர்பான முக்கிய தீர்மானம் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கூட்டத்திற்கு வடக்கில், மன்னுரைத்தவிர்ந்த மற்றும் 13 தொகுதிகளிலிருந்து பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர். (க)

## நெடுஞ்செழியன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் விளக்குகையில், தி.மு.க. மக்களின் நம்பிக்கையை முற்ருக இழந்துவிட்டது என்ருர்.

1972-ம் ஆண்டுக்குப் பின் தி. மு. க. வுக்கு அடுத்தடுத்து கிடைத்த தோல்விகள் இதனைத் தெளிவாகக் காட்டுகின்றன என்ருர் அவர். லோக்சபா தேர்தலில் கழகத்திற்குக் கிடைத்த படுதோல்வியை அடுத்து தமது தலைமைப் பதவியிலிருந்து கலைஞர் மு. கருணுநிதி ராஜினுமா செய்திருக்கவேண்டும். ஆஞல் அதை நிறைவேற்ற தவறிவிட்டார் என்ருர் நாவலர் நெடுஞ்செழியன்.

தி. மு. க. முன்னுள் அமைச்சரவை மீதான லஞ்சப் புகார்களை தமது கட்சியும் தி.மு.க. போல எதிர்க்குமென்று கூறிய அவர்சர்க்காரியாகமிஷன்விசாரணையையும் தமதுகட்சி பகிஷ்கரிக்குமென்று தொடர்ந்து சொன்னுர்.

கலைஞர் மு. கருணுநிதிக்கும் தமக்கும் இடையே நல்லுறவு ஏற்படுவதற்கான பேச்சுக்கு வாய்ப்பு எதுவும்இல்லைஎன்ருர் அவர்.

## ராஜினுமா

த. வி.கூட்டணியின் மேதின உபகுழுவிலிருந்து க. பரமசாமி செ. இராசதுரை, ச. யோகராஜா, இரா. பற்குணம், எஸ். சின்னத்துரை, க. குலசேகரம் பிள்ளை, வே. கர்ராளசிங்கம், எஸ். கணபதி ஆகியோர் ராஜினுமாச் செய்துள்ளனர்.

## கூட்டணிவேட்பா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆஞலும், இறுதி முடிவு எடுக்கப்படவில்லையென்றும், உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடைசியாகக் கிடைத்த தகவல்களின்படி சகல தொகுதிகளிலும் பிரச்னைகள் இருப்பதாகவும், எந்தத்தொகுதி பற்றியும் இறுதிமுடிவுஎடுக்கப்படவில்லையென்றும் அறியப்படுகிறது.

[பிந்திக் கிடைத்தசெய்தி]

இன்று சனிக்கிழமை தம்மை கொழும்பில் சந்திக்குமாறு கொழும்பில் நேற்று கூடிய த. வி. கூ. வேட்பாளர் நியமனக்குழு மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராஜதுரை, கவிஞர் காசி ஆனந்தன், திருமலை எம். பி. திரு. பி. நேமிநாதன், மூதூர் எம். பி. திரு. ஏ. தங்கத்துரை ஆகியோரை அழைத்துள்ளதாக அறியப்படுகிறது. [ம-உ]

## கூட்டணி-கம்யூனிஸ்ட்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயினும் தமிழ்த்தொழிற்சங்க கூட்டணி இது பற்றி முடிவு எடுக்கும் வரை இவர்களைப் பொறுத்திருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று திரு. அ. அமிர்தலிங்கம்விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார். (ம-உ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவிதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna) Telegram: Eelanadu, Telephone 389. Registered as a Newspaper in SriLanka.